# மோட்டார் வாகன் போக்குவரத்துத் திணைக்களம்

# செயலாற்றுகை அறிக்கை 2019

த.பெ.இல. 533 – 341, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05

# உள்ளடக்கம்


| | பக்க இலக்கம் |
|---|---|
| **1. அத்தியாயம்** | |
| 1.1 திணைக்களத்தின் பின்னணி | 01 |
| 1.2 திணைக்களத்தின் நோக்கு / பணிநோக்கு / இலக்கு | 01 - 02 |
| 1.3 திணைக்களத்தின் செயற்பாடுகள் | 02 |
| 1.4 ஒழுங்கமைப்பு கட்டமைப்பு / ஆளணி | 03 - 04 |
| 1.5 திணைக்களத்தின் நிருவாக செயற்பாடுகள் | 05 – 12 |
| **2. அத்தியாயம்** | |
| 2.1 ஓட்டும் நிலையிலுள்ள மோட்டார் வாகனங்களது புதிய பதிவு | 13 - 19 |
| 2.2 வாகன உரிமைகளை மாற்றும் பதிவு | 20 - 21 |
| 2.3 சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் சேவை | 21 - 22 |
| 2.4 மோட்டார் வாகனம் தொடர்பான தொழிநுட்ப சேவை | 23 - 24 |
| 2.5 புகைப்பரிசோதனை தொடர்பான செயற்பாடுகள் | 24 - 27 |
| 2.6 வீதிப் பாதுகாப்பு தொடர்பான கொள்கை வகுப்புகள் | 27 – 28 |
| **3. அத்தியாயம்** | |
| 3.1 நிதி செயலாற்றுகை கூற்று | 29 - 30 |
| 3.2 நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று | 31 |
| 3.3 நிதிப்பாய்ச்சல் தொடர்பான கூற்று | 32 - 34 |
| 3.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான குறிப்பு | 35 |
| 3.5 வருமான சேகிரிப்பு செயலாற்றுகை | 35 - 36 |
| 3.6 ஒதுக்கப்பட்ட பாதீடுகளை பயன்படுத்தும் செயலாற்றுகை | 36 |
| 3.7 நி.பி.208 இன் பிரகாரம், பிற அமைச்சுக்கள் / திணைக்களங்களது பிரதிநிதிகளாக இத்திணைக்களத்திற்கு / மாவட்ட செயலகத்திற்கு / மாகாண சபைக்கு அளிக்கப்பட்ட ஒதுக்குகள் | 37 |
| 3.8 நிதியல்லா சொத்துக்களை அறிக்கை செய்தலின் செயலாற்றுகை | 37 |
| 3.9 கணக்காய்வாளரின் அறிக்கை | 37 |
| 4. அத்தியாயம் | |
| 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை குறிகாட்டிகள் | 38 – 39 |

**5. அத்தியாயம்**

5.1 அடையாளங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 40 - 42

5.2 நிலைபெறான இலக்கினை அடைந்து கொண்டதன் வெற்றிகள் மற்றும் சவால்கள் 43 – 44

**6. அத்தியாயம்**

6.1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம் 45

6.2 நிறுவனத்தின் செயற்றிறனுக்கு மனிதவளங்களின் குறை அல்லது மிகை எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளது. 45

6.3 மனிதவள அபிவிருத்தி 46

**7. அத்தியாயம்**

இணக்க அறிக்கைகள் 47 - 55

இணைப்புகள்

## மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் செய்தி....

மோட்டார் வாகன பதிவு மற்றும் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதலை நோக்கமாகக் கொண்டு 1928ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களமானது, தற்போது 94 வருடங்கள் என்ற நீண்டதொரு பயணத்தைக் கடந்து வந்துள்ளது. அவ்வடிப்படையில் இத்திணைக்களத்தின் செயற்றிறனை அளவிட்டு பார்ப்பதற்காக தயாரிக்கப்பட்ட செயலாற்றுகை அறிக்கையை, இம்முறை 90ஆவது தடவையாகவும் வெளியிடுவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். மோட்டார் வாகனங்களது புதிய பதிவு, உரிமைகளை மாற்றுதல், சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், மோட்டார் வாகனங்கள் தொடர்பான தொழிநுட்ப சேவை, வீதிப்பாதுகாப்பு மற்றும் புகைப்பரிசோதனை போன்றவற்றை இத்திணைக்களத்தின் செயற்பாடுகளாகக் குறிப்பிடலாம்.

2019ஆம் ஆண்டின் செயலாற்றுகையை கருத்திற் கொள்ளும்போது, புதிதாகப் பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களது எண்ணிக்கை 367,303 ஆகும். இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட வாகன உரிமை மாற்றங்களது எண்ணிக்கை 675,018 என்பதுடன் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 917,729 ஆகும். அதனடிப்படையில், வருட இறுதியில் இலங்கையின் மொத்த மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 8,095,224 ஆகும். யு தரத்தைச் சார்ந்த திணைக்களம் என்ற ரீதியில், எமது திணைக்களமானது 2019ஆம் ஆண்டு 13,902 மில்லியன் ரூபாய்களை வருமானமாக ஈட்டியுள்ளதுடன், திணைக்களத்தின் மீண்டெழும் செலவானது 1,692 மில்லியன் ரூபாய்களாகும்.

இத்திணைக்களத்தின் செயற்பாடுகளை அரச கொள்கைத் திட்டமிடல்களுக்கமைய மேற்கொள்ளும்போது, மோட்டார் வாகனங்கள் தொடர்பான செயற்பாடுகளில் தேவைப்பட்ட முக்கியமான வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளைத் தந்துதவிய போக்குவரத்து சேவைகள் கௌரவ அமைச்சருக்கும், பிரதி அமைச்சருக்கும், அதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி ஒத்துழைப்பு நல்கிய அமைச்சின் செயலாளருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வாறே திணைக்களத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தமது பூரண ஒத்துழைப்பை நல்கிய திணைக்களத்துடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களுக்கும், திணைக்களத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அர்ப்பணிப்புடனும், வினைத்திறனுடனும், விளைதிறனுடனும் தமது சேவையை வழங்கிய திணைக்களத்தின் அனைத்து ஆளனியினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். திணைக்களத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டும், வினைத்திறனான மக்கள் சேவைக்கு நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்தி, சிறந்த சேவையை வழங்குவதன் ஊடாக அரச சேவையின் நம்பகமான சேவை வழங்குனர் என்ற நிலையை எட்டுவதே எமது திணைக்களத்தின் எதிர்கால நோக்கமாகும்.

**சுமித் சீ.கே.அலஹகோன்**
**மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம்**

# 1 அத்தியாயம்

## மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்

### 1.1 திணைக்களத்தின் பின்னணி

இலங்கையில் வாகனப் பதிவு மற்றும் சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்குதலை நோக்கமாகக் கொண்டு 1916ஆம் ஆண்டு 14ஆம் இலக்க சட்டம் கொண்டுவரப்பட்டதுடன், அதன் ஊடாக பொலிஸ் மாஅதிபரின் கீழ் அச்செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. பின்னர் 1925 இது தொடர்பாக அமைக்கப்பட்ட விசேட குழுவின் விதப்புரைகளுக்கமைய 1927ஆம் ஆண்டு 20ஆம் இலக்க மோட்டார் கார் கட்டளைச் சட்டத்தினை சட்டமயமாக்கியமை இச்செயற்பாட்டின் இன்னுமொரு மைல்கல்லாகும். இதன் கீழ் மோட்டார் வாகனங்கள் மற்றும் சாரதிகளை பதிவு செய்தல் மற்றும் வருடாந்த வருமானச் சான்றிதழ்களை வழங்குவதற்கு முன்னர் வாடகைக் கார் மற்றும் லொறிகளைப் பரிசோதனை செய்தல் என்பனவற்றை நோக்கமாகக் கொண்டு, 1927ஆம் கொண்டுவரப்பட்ட இச்சட்டத்தின் அடிப்படையில் 1928 ஜனவரி 01ஆந் திகதி மோட்டார் வாகன பதிவாளரொருவரின் கீழ் மோட்டார் வாகன பதிவாளர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது.

இப்பயணத்தின் இன்னுமொரு மைல்கல்லாக 1951ஆம் ஆண்டு 14ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டத்தின் ஊடாக ஒரு திணைக்களமாக இது தாபிக்கப்பட்டமையை இங்கு குறிப்பிடலாம். இலங்கையில் மோட்டார் வாகனப் பதிவு, தொழிற்பாடு, சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், வீதிப்பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழலுக்குப் பொருத்தமான வாகனப் பயன்பாடு போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு வினைத்திறனான சேவையை வழங்குதல் திணைக்களத்தின் பிரதான நோக்கமாகும்.

தற்காலத்தில் இலங்கையில் வாகனப் பாவனை துரித கதியில் அதிகரித்திருப்பதன் காரணமாக திணைக்களத்தின் செயற்பாடுகள் விரிவடைந்துள்ளதுடன் அவற்றைத் தரமாகவும் மிகத் துரிதமாகவும் வழங்கும் பொருட்டு நாரஹேன்பிட்ட பிரதான அலுவலகத்தை மையமாகக் கொண்டு, வேரஹெர சாரதி அனுமதிப்பத்திர அலுவலகம் மற்றும் பல மாவட்டச் அலுவலகங்கள் ஒன்லைன் (ழுடெiநெ) தொடர்புகள் ஊடாக தமது சேவைகளை வழங்குகின்றன.

அனைத்து மாவட்ட அலுவலகங்களும் (ழுடெiநெ) தொடர்புகள் ஊடாக நாரஹேன்பிட்ட பிரதான அலுவலகத்துடன் தொடர்புபட்டு கிராமிய, பிரதேச மட்டத்திலான சேவைபெறுநர்களது தேவைகளை துரிதமாக நிறைவேற்றி நவீன தொழிநுட்ப வசதிகள் ஊடாக சேவைபெறுநர்களது எதிர்பார்ப்புக்களை மிகச் சுலபமாகவும் விரைவாகவும் நிறைவேற்றுவதே இத்திணைக்களத்தின் எதிர்பார்ப்பாகும்.

### 1.2

**திணைக்களத்தின் தொலைநோக்கு**

**“சிறந்த மோட்டார் வாகனச் செயற்பாடொன்றின் மூலம் உயர் அபிமானத்தை வென்றெடுத்தல்”**

## திணைக்களத்தின் பணிநோக்கு

**"தன்முறைப்பாற்றலுடன் கூடிய பணியாட்தொகுதியின் ஒன்றிணைந்த முயற்சியினூடாகவும், போக்குவரத்துச் சட்டம் மற்றும் ஏனைய சட்ட ஏற்பாடுகள் என்பனவற்றை நடைமுறைப்படுத்துவதன் ஊடாகவும் மக்களுக்கு அர்ப்பணிப்புடனும், நவீன தொழிநுட்பத்துடன் கூடியதுமான மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சேவையை வழங்குதல்"**


## திணைக்களத்தின் நோக்கங்கள்

1. இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற மற்றும் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற அனைத்து வாகனங்களதும் பதிவுகளை உறுதி செய்தல் (நேற சுநபளைவசயவழைெ)
2. ஓட்டக்கூடிய நிலையிலுள்ள அனைத்து வாகனங்களதும் சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்துதல். (வுசயளெகநச)
3. வினைத்திறனான தொழிநுட்ப சேவைகளை வழங்குதல்.
4. வீதி ஒழுங்குவிதிகளைப் பின்பற்றும் ஒழுக்கமிக்க சாரதிகளை உருவாக்குவதன் ஊடாக வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.
5. சர்வதேச தரத்திலான சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்குதல்.
6. சுற்றுச்சூழலுக்குப் பொருத்தமான போக்குவரத்துக் கட்டமைப்பொன்றை உருவாக்குதல்.

## 1.3 திணைக்களத்தின் கடமைப்பொறுப்புக்கள்

1. ஓட்டக்கூடிய நிலையிலுள்ள மோட்டார் வாகனங்களது புதிய பதிவு.
2. வாகன உரிமை மாற்றம் செய்தல்.
3. சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்
4. மோட்டார் வாகனங்கள் தொடர்பான தொழிநுட்ப சேவைகள்
5. புகைப்பரிசோதனை செயற்பாடுகளை கண்காணித்தல்.
6. வீதிப் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல்.

## 1.4 நிறுவனக் கட்டமைப்பு



## ஆளணியினர்
## பதவிநிலை உத்தியோகத்தர்கள் - 2019

- மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் - திரு.ஏ.எச்.கே. ஜகத் சந்திரசிறி(2019.12.06க்கு)
  - திரு. ஜே.எம்.யு.கே.ஜயசேகர ) ப.க)
- பிரதான நிதி உத்தியோகத்தர் - திரு.எஸ்.எல்.ஹெட்டிஆரச்சி
- ஆணையாளர் (நிருவாகம்) - திரு.ஜே.எம்.யு.கே.ஜயசேகர
- ஆணையாளர் (அபிவிருத்தி) - திரு.எச்.எம்.ஜே.எம்.ஹேரத்
- ஆணையாளர் (புலனாய்வு) - திரு.கே.ஏ.டப்.எல்.டப்.குணரத்ன
- ஆணையாளர் ( தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம்) - திரு.டீ.டி.எப்.சுரவீர
- ஆணையாளர் (சாரதி அனுமதிப்பத்திரம்) - திருமதி.சமந்தி மிகிந்துகுல
- பிரதான கணக்காளர் - திரு டீ.எச்.தாஜுதீன்
- பிரதான உள்ளக கணக்காய்வாளர் - திரு.டீ.ஓ.ஆர்.வனிகரத்ன
- பிரதி ஆணையாளர் ( கார் உரிமை மாற்றம்) - திரு.டப்.ஏ.ஆர்.விக்கிரமசிங்க
- பிரதி ஆணையாளர் (மோட்டார் சைக்கிள் புதிய பதிவு) - திருமதி.டப்.டி.நயோமி பிரனாந்து
- பிரதி ஆணையாளர் (யாழ்ப்பாணம்) - திரு.வை.பரந்தாமன்
- பிரதி ஆணையாளர் (பஸ்,காணி வாகன உரிமை மாற்றம்)– திருமதி.பீ.ஏ.டீ.டீ.டப்.சிறிவர்தன
- பிரதி ஆணையாளர் (லொறி உரிமை மாற்றம்) - திரு.சேத்திய வீரசூரிய
- பிரதி ஆணையாளர் (வர்த்தக வாகன உரிமை மாற்றம்) - திரு.டீ.டீ.சீ.அத்துகோரள
- உதவி ஆணையாளர் (வர்த்தக வாகன புதிய பதிவு ஐ) - திரு.டப்.கே.என்.என்.எஸ்.பண்டார
- உதவி ஆணையாளர் (குருணாகல்) - திரு.ஈ.ஜீ.விக்கிரமசிங்க
- உதவி ஆணையாளர் (மோட்டார் சைக்கிள் உரிமை மாற்றம்) – திரு.எம்.பீ.கசுன் பிரமோதித்
- உதவி ஆணையாளர் (வர்த்தக வாகனம் புதிய பதிவு ஐஐ) – திருமதி.எம்.எல்.என்.சந்தமாலி
- உதவி ஆணையாளர் (அநுராதபுரம்) - திரு.ஆர்.எம்.தர்மசிறி ஜயவர்தன
- உதவி ஆணையாளர் (கம்பஹா) - திரு.எம்.எச்.பீ.எல்.ஏ.விஜயபால
- உதவி ஆணையாளர் (அம்பாந்தோட்டை) - திரு.எச்.டீ.சத்தரசிங்க
- உதவி ஆணையாளர் (வேரஹெர) - திருமதி.ஆர்.டீ.பீ.வெடிக்கார
- உதவி ஆணையாளர் (நிருவாகம்) - திருமதி.கே.கே.கே.பொன்சேகா
- கணக்காளர் (வருமானம்) -திருமதி.ஏ.எம்.ஐ.டீ.அதிகாரி
- கணக்காளர் (கொடுப்பனவு) - திரு.டப்.கே.பீ.எச்.என்.எம்.ருத்ரிகோ
- உதவி ஆணையாளர் (தொழிநுட்பம்) - திரு.ஜே.ஏ.எஸ்.ஜயவீர
- உதவி பணிப்பாளர் (தகவல் தொ.தொழிநுட்பம்) - திரு.பீ.டப்.பீ.பீ.ஈரியகம
- சட்ட உத்தியோகத்தர் - திரு.கே.ஐ.யோகசந்திர
- நிருவாக உத்தியோகத்தர் (நிருவாகம்) - திருமதி.ஏ.எம்.சீ.ஜே.அதிகாரி
- நிருவாக உத்தியோகத்தர் (வேரஹெர) - திருமதி.யு.ஐ.முனசிங்க
- நிருவாக உத்தியோகத்தர் (வேரஹெர) - திருமதி.கே.இந்திராதேவி
- கருத்திட்ட பணிப்பாளர் (புகைப் பரிசோதனை) - திரு.ஆர்.எல்.மொஹமட்

## 1.5 திணைக்கள நிருவாக செயற்பாடுகள்

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்தின் வழிகாட்டலின் பேரில் ஆணையாளர் (நிருவாகம்) இனால் திணைக்களத்தின் நிருவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ஆணையாளர் (அபிவிருத்தி) இனால் அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதற்குப் புறம்பாக வேரஹெர உப அலுவலகமும் மாவட்ட அலுவலகங்களும் பிரதான அலுவலகத்துடன் தொடர்புகளைப் பேணி வருவதுடன் அவ்வொவ்வொரு இடங்களிலும் பணியாற்றும் ஆணையாளர்கள் ஊடாக அல்லது மாவட்டச் செயலாளர் ஊடாக நிருவாகம் முன்னெடுக்கப்படுகின்றது. தலைமைக் காரியாலயம் நாரஹேன்பிட்டவில் அமைந்துள்ளதுடன் வேரஹெர அலுவலகமும், மாவட்ட அலுவலகமும் தலைமைக் காரியாலயத்தை மையப்படுத்தி தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

### பிரதான அலுவலகத்திலுள்ள கிளைகள்

- **I.** ஆணையாளர் நாயம் அலுவலகம்
- **II.** தாபனக் கிளை
- **III.** அபிவிருத்திக் கிளை
- **IV.** கணக்கு கிளை
- **V.** கணனி மற்றும் தகவல் தொழிநுட்ப கிளை
- **VI.** உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுப் கிளை
- **VII.** சட்ட கிளை
- **VIII.** அதிசொகுசு வரி கிளை
- **IX.** தபால் கிளை
- **X.** வர்த்தக வாகனம் புதிய பதிவு கிளை ஐ
- **XI.** வர்த்தக வாகனம் புதிய பதிவு கிளை ஐஐ
- **XII.** முச்சக்கரவண்டி புதிய பதிவு கிளை
- **XIII.** மோட்டார் சைக்கிள் புதிய பதிவு கிளை
- **XIV.** மோட்டார் கார் உரிமை மாற்றம் கிளை
- **XV.** வர்த்தக வாகனம் உரிமை மாற்றம் கிளை
- **XVI.** லொறி உரிமை மாற்றம் கிளை
- **XVII.** பஸ் மற்றும் காணி வாகனம் உரிமை மாற்றம் கிளை
- **XVIII.** முச்சக்கரவண்டி உரிமை மாற்றம் கிளை

XIX. மோட்டார் சைக்கிள் உரிமை மாற்றம் கிளை

XX. தொழிநுட்ப கிளை

XXI. இலக்கத் தகடு (கொழும்பு) கிளை

XXII. இலக்கத் தகடு (வெளி மாகாணம்) கிளை

XXIII. ஆவணக்காப்பகம் ஐ

XXIV. ஆவணக்காப்பகம் ஐஐ

XXV. புள்ளிவிபரவியல் கிளை

## பிரதான அலுவலகத்திலுள்ள கிளைகளது செயற்பாடுகள்

### I. ஆணையாளர் நாயகம் அலுவலகம்

பொதுமக்களது தேவைகளை அடிப்படையாகக் கொண்டு, அத்தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவதே இந்த கிளையின் முக்கிய பொறுப்பாகும். அத்தோடு இக்கிளையானது மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் வழிகாட்டலின் கீழ் செயற்படுகின்றது.

### II. தாபனக் கிளை

"நேர்மறையான சிந்தனைகள் ஊடாக வினைத்திறனான அரச சேவை'' என்பதை நோக்காகக் கொண்டு தாபனக் கிளை செயற்படுகின்றது. திணைக்களத்தின் நிருவாகத்திற்குப் பொறுப்பான ஆணையாளரது வழிகாட்டலில் திணைக்களத்தின் அனைத்து ஆளனியினரதும் தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகள், உட்கட்டமைப்பு செயற்பாடுகள் உள்ளிட்ட திணைக்களத்தின் பராமரிப்பு செயற்பாடுகள் என்பன இக்கிளையின் பிரதான செயற்பாடுகளாகக் காணப்படுவதுடன் நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு, ஓய்வூதியம், சேவை நீடிப்பு, ஒழுக்காற்று, தனியாள் கோவையை பேணுதல், சம்பள ஏற்றங்களை அனுமதித்தல், பல்வேறு முற்பணங்களை அனுமதித்தல், அக்ரஹார காப்புறுதி சிட்டைகளைத் தீர்த்தல், நீர், மின்சாரம், தொலைபேசி கட்டணங்களைத் தீர்த்தல் என்பன இக்கிளையின் இன்னபிற செயற்பாடுகளாகும். அத்தோடு தபால் கிளை மற்றும் ஆவணக்காப்பகம் ஐ மற்றும் ஐஐ கிளைகளும் இத்தாபனக் கிளையின் நிருவாகத்தின் கீழ் செயற்படுகின்றன.

### III. அபிவிருத்தி கிளை

''திருப்திமிக்க ஆளனியினரின் ஊடாக மிகச்சிறந்த மக்கள் சேவை'' என்ற கருப்பொருளுடன் இக்கிளை செயற்படுகின்றது. அபிவிருத்திக் கிளைக்குப்

பொறுப்பான ஆணையாளரின் வழிகாட்டலின் கீழ் செயற்படுவதுடன் அந்தந்த வருடத்திற்கான திணைக்களத்தின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், திணைக்களத்தின் நிருமாணப் பணிகளை முன்னெடுத்தல், ஆளினியினரை ஊக்கப்படுத்தும் பயிற்சித் திட்டங்களை முன்னெடுத்தல், திணைக்களத்தின் அனைத்து கிளைகளிலும் பிரதேச அலுவலகங்களிலும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல், அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கவேண்டிய அறிக்கைகளை சமர்ப்பித்தல், வரவுசெலவுத் திட்டம், செயலாற்றுகை அறிக்கை, செயற்றிட்ட அறிக்கைகளை தயாரித்தல், வினைத்திறன் அபிவிருத்தி திட்டங்கள் போன்ற திணைக்களத்தின் முக்கிய பல செயற்பாடுகள் இக்கிளையினால் முன்னெடுக்கப்படுகின்றன.

## IV. கணக்கு கிளை

‘‘சரியானதும் வெளிப்படைத்தன்மையானதுமான நிதி முகாமைத்துவம் ஊடாக நிறுவனத்தின் நோக்கத்தை நிறைவேற்றுதல்’’ என்பதை நோக்கமாகக் கொண்ட கணக்குக் கிளையானது வருமானம் செலவு தொடர்பான அனைத்து செயற்பாடுகளையும் கணக்கு வைத்தல், மற்றும் திறைசேரிக்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல், கணக்காய்வு ஐயவினாக்கள் மற்றும் அரச கணக்கு குழுவிற்குரிய அறிக்கைகளை சமர்ப்பித்தல், நி.பி.135இன் கீழ் அதிகாரக் கையளிப்புடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்கு முன்னுரிமையளித்தல் ஊடாக திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்கு உதவுதல் இத்திணைக்களத்தின் பொறுப்புக்களாகும்.

## V. கணனி மற்றும் தகவல் தொழிநுட்ப கிளை

திணக்களத்தின் நோக்கம் மற்றும் பணிநோக்கை அடைந்து கொள்ளும் பொருட்டுத் தேவையான நவீன தொழிநுட்பங்களை அறிமுகப்படுத்தி அவற்றை கணனிமயப்படுத்தி தொழிநுட்ப செயற்பாடுகளை முகாமை செய்தல் மற்றும் ஏனைய கிளைகளுக்குத் தேவையான தகவல் தொழிநுட்ப சேவைகளை வழங்குதல் இக்கிளையான பிரதான நோக்கமாகக் காணப்படுவதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் தகவல்களை வழங்குதலும் இக்கிளையின் செயற்பாடுகளாகும்.

## VI. உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வு கிளை

‘‘கணக்காய்வு மற்றும் புலனாய்வு நடவடிக்கைகள் ஊடாக உயர் விளைதிறன்’’ என்னும் முக்கிய நோக்கத்தைக் கொண்டதாக திணைக்களத்தின் அனைத்து கிளைகளினதும் உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளும், மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படுகின்ற கடமைகளும் இக்கிளையினால் மேற்கொள்ளப்படுகின்றன

## VII. சட்டக் கிளை

''சட்டத்திற்கு முன்னால் நியாயம்'' என்பதைத் தொனிப்பொருளாகக் கொண்டதாக திணைக்களத்தின் சட்ட செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்கப்படுவதுடன் திணைக்களத்திற்கெதிரான வழக்குகளைத் தொடுக்கும் சந்தர்ப்பத்தில் சட்டமாஅதிபர் திணைக்களம் மற்றும் ஏனைய தரப்பினருடன் இணைந்து செயற்பட்டு திணைக்களத்தின்பொருட்டு தோன்றுதல் மற்றும் மோட்டார் வாகனங்கள் தொடர்பான சட்டரீதியான நிலைமைகளுக்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதல் இக்கிளையின் பிரதான கடமைகளாகும்.

## VIII. அதிசொகுதி வரி கிளை

''முறையான வரி செயற்பாட்டின் ஊடாக தேசிய அபிவிருத்திக்கு தோள் கொடுத்தல்'' என்ற நோக்கத்தில் 1995ஆம் ஆண்டு 16ஆம் இலக்க நிதிச்சட்டம் மற்றும் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தச் சட்டங்களின் கீழ் அதிசொகுசு, பகுதிசொகுசு, பகுதிசொகுசு இருவித பாவனை வரிகைகளை அறவிடல் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற காப்புறுதி நிறுவனங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் வழிகாட்டல், வரி செலுத்துதல் தொடர்பில் வாகன உரிமையாளர்களை அறிவுறுத்துதல் மற்றும் நிலுவை வரிகைளை அறவிடுதல், வரி செலுத்துதல் தொடர்பில் வாகனங்களுக்கு வெவ்வேறாக கணனி கட்டமைப்பொன்றைப் பேணிச் செல்லுதல், வரி வருமானத்தை திறைசேரிக்கு மாற்றுதல், வரி வருமான அறிக்கைகளைத் தயாரித்தல் என்பன இந்த கிளையின் செயற்பாடுகளாகும்.

## IX. வர்த்தக வாகன புதிய பதிவு கிளை ஐ மற்றும் ஐஐ

''வர்த்தக வாகனங்களது புதிய பதிவு கிளை ஊடாக மோட்டார் வாகனப் போக்குவரத்து தொடர்பில் மக்களது உயர் திருப்தியைப் பெறுதல்'' என்பதை நோக்கமாகக் கொண்ட இந்தக் கிளைகளில், விசேட செயற்பாட்டு வாகனங்கள், இருவித பாவனை வாகனங்கள், மோட்டார் லொறி, மோட்டார் கார், மற்றும் முப்படைகளினால் கொள்வனவு செய்யப்படுகின்ற வாகனங்கள் மற்றும் அரசுடமையாக்கப்பட்டு ஏலவிற்பனை செய்யப்படுகின்ற வாகனங்கள் என்பனவற்றை பதிவு செய்து, பதிவுச் சான்றிதழ்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் முக்கியமாக இடம்பெறுகின்றன. அத்தோடு அரசின் கொள்கைத் திட்டங்களுக்கமைய வாகனங்களுக்கான இலக்கங்களை ஒதுக்குதல் மற்றும் அதற்கான கட்டணங்களை அறவிடுதல் போன்ற செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. 2018ஆம் ஆண்டில் இந்தக் கிளையினால் 66,194 மோட்டார் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## X. முச்சக்கர வண்டி புதிய பதிவு கிளை

"முச்சக்கர வண்டிகளை புதிதாகப் பதிவு செய்வதன் ஊடாக மக்கள் திருப்தியடையக்கூடிய ஒழுக்கமிக்க சமுதாயம்'' என்ற நோக்கின் அடிப்படையில் இதுவரை பதிவு செய்யப்படாத முச்சக்கர வண்டிகளை முதன்முறையாக பதிவு செய்தல் இக்கிளையின் பாரிய பணியாகும். அத்தோடு தூதுவராலயங்களது வாகனங்களை உரிமை மாற்றம் செய்வதைப் பதிவு செய்தல், அப்பதிவுகளை இரத்துச் செய்தல், அவ்வாகனங்களை நாட்டிலிருந்து கொண்டு செல்வதற்குத் தேவையான செயற்பாடுகள் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டில் இக்கிளையினால் 16,808 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## XI. மோட்டார் சைக்கிள் புதிய பதிவு கிளை

"பொதுமக்களுக்கு தாமதமின்றி சிறந்த சேவையை வழங்குதல்'' என்ற நோக்கத்தை மையமாகக் கொண்டு செயற்படும் இக்கிளையில் இலங்கையில் இதுவரை பதிவு செய்யப்படாத அனைத்து புதிய மோட்டார் சைக்கிள்களைப் பதிவு செய்தல், அதனுடன் தொடர்புடைய அனைத்து செய்ற்பாடுகளையும் மேற்கொள்ளும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. 2019ஆம் ஆண்டு மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை 284,301 ஆகக் காணப்பட்டது.

## XII. வாகன உரிமை மாற்ற கிளை

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து வாகனங்களது உரிமைகளை மாற்றம் செய்யும் போது அதனை மீளப் பதிவு செய்யும் நடவடிக்கையானது பின்வரும் கிளைகளினால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த வாகன உரிமை மாற்றங்களின்போது அந்தந்த வாகன வகையின் அடிப்படையில் 6 வாகன உரிமை மாற்றக் கிளைகள் இத்திணைக்களத்துள் செயற்படுகின்றன.

- லொறி உரிமை மாற்றக் கிளை
- கார் உரிமை மாற்றக் கிளை
- வர்த்தக வாகன உரிமை மாற்றக் கிளை
- முச்சக்கர வண்டி உரிமை மாற்றக் கிளை
- மோட்டார் சைக்கிள் உரிமை மாற்றக் கிளை

- பஸ் மற்றும் காணி வாகன உரிமை மாற்றக் கிளை

இவ்வனைத்துக் கிளைகளும் ஒரு ஆணையாளர் அல்லது ஒரு உதவி ஆணையாளரது தலைமையில் செயற்படுவதுடன் இக்கிளைகளில் ஒரு நாள் சேவை மற்றும் சாதாரண சேவைகளின் கீழ் சேவைகள் வழங்கப்படுன்றன. பொதுவாக அக்கிளைகளினால் வழங்கப்படுகின்ற செயற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

* உரிமை மாற்றத்தை பதிவு செய்தல்.
* முற்றான உரிமை அல்லது குத்தகையில் உள்ள வாகனங்களது உரிமை மாற்றத்தை பதிவு செய்தல்.
* முற்றான உரிமை அல்லது குத்தகையை இரத்துச் செய்து அவ்வாகனங்களது உரிமை மாற்றத்தை பதிவு செய்தல்.
* பதிவுச் சான்றிதழின் பிரதியை வழங்குதல்.
    * முறையாக மேற்கொள்ளப்படுகின்ற பௌதீக மாற்றங்கள் மற்றும் ஆவணங்களில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களை சான்றிதழில் மாற்றுதல். உதா:- என்ஜின் இலக்கம், நிறம், முகவரி
    * புதிய ஆங்கில இலக்கங்களைக் கொண்ட வாகனங்களது இலக்கத் தகடுகள் மற்றும் ஸ்ரிக்கர்களது பிரதியை வழங்குவதற்காக தரவுகளை கணனிமயப்படுத்துதல்.
    * உரிமை மாற்றத்திற்காக கிளைக்கு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள வாகனங்களுக்கு வருமானச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு ஆவுயு-11 ஆவணத்தை உறுதிப்படுத்தி வழங்குதல்.
    * சட்டரீதியான செயற்பாடுகளுக்குத் தேவையான சான்றுப்படுத்தப்பட்ட கணனி பிரதிகளை வழங்குதல் மற்றும் கிடைக்கின்ற எதிர்ப்புக்களை குறித்துக் கொள்ளுதல்.

## XIII. தொழிநுட்ப கிளை

வாகனங்களைப் பதிவு செய்வதுடன் தொடர்புடையதாக வழங்கப்படுகின்ற தொழிநுட்ப சேவைகளான வாகனப் பரிசோதனைகள், பார சான்றிதழ் வழங்குதல் மற்றும் ஏனைய தொழிநுட்ப சேவைகளை வழங்குவதுடன் அது தொடர்பான ஆலோசனைகளையும் வழங்குகின்றது. இச்சேவைகளுக்காக உதவி ஆணையாளரின (தொழிநுட்பம்) கீழ், மோட்டார் வாகனப் பரிசோதகர்களின் மேற்பார்வையின் கீழ் சேவைகள் இடம்பெறுவதுடன் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு உதவுதல் இக்கிளையின் செயற்பாடுகளாகும்.

**வேரஹெர உப அலுவலகம்**

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்கத்தின் பிரதான அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட வகையில் வேரஹெர உப அலுவலகம் செயற்படுவதுடன் சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கல், வாகனப் பரிசோதனைகளை மேற்கொள்ளல், நிறை சான்றிதழ்களை வழங்குதல் என்பன இவ்வலுகத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அலுவலகத்தின் அனைத்து செயற்பாடுகளும் ஒரு ஆணையாளர் மற்றும் ஒரு பிரதி ஆணையாளரது தலைமையில் இடம்பெறுகின்றன.

**மாவட்ட அலுவலகம்**

திணைக்களத்தின் அனைத்து செயற்பாடுகளையும் பன்முகப்படுத்தி நாடளாவிய ரீதியில் சேவைபெறுநர்கள் தங்களது சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய விதத்தில் மாவட்ட அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் யாழ்ப்பாணம், குருணாகல் அலுவலகங்கள் பிரதி ஆணையாளரின் கீழும் அம்பாந்தோட்டை, அநுராதபுரம், கம்பஹா அலுவலகங்கள் உதவி ஆணையாளரின் கீழும் மற்றைய அலுவலகங்கள் மாவட்டச் செயலாளரது மேற்பார்வையின் கீழ், மோட்டார் வாகனப் பரிசோதகர்களால் நிருவகிக்கப்படுகின்றன.

இந்த மாவட்ட அலுவலகங்கள் ஊடாக சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பங்களை பொறுப்பேற்றல், அனுமதிப்பத்திரங்களை வழங்குவதுடன் தொடர்புடைய எழுத்துப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைகளை நடாத்துதல் என்பன இடம்பெறுகின்றன. அநுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகங்களில் சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடப்படுகின்றன. குருணாகல், கம்பஹா, களுத்துறை, மொணறாகலை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட அலுவலகங்களில் சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கான விண்ணப்பங்களது சேகரிப்பு மட்டும் இடம்பெறுவதுடன் சாரதி அனுமதிப்பத்திரங்கள் வேரஹெர அலுவலகத்தின் ஊடாகவே வழங்கப்படுகின்றன. ஏனைய மாவட்ட அலுவலகங்களில் ழகக டனைந முறை பயன்படுத்தப்படுகின்றன.

இச்செயற்பாடுகள் மட்டுமன்றி ஒதுக்கப்பட்ட இலக்கங்களின் மீது மாவட்டங்களுக்குரிய மோட்டார் சைக்கிள்களது புதிய பதிவு, அம்மோட்டார் சைக்கிள்களது உரிமை மாற்றம், நிறை சான்றிதழ் வழங்குதல், தொழிநுட்ப சேவைகள் என்பனவற்றை தலைமைக் காரியாலயத்திற்கு முன்வைக்கும் பொருட்டு அனைத்து விண்ணப்பங்களையும் பொறுப்பேற்கும் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

**மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகங்கள்**




1.1 **மாவட்ட அலுவலகங்களது அமைவிடம்**

# அத்தியாயம் 02

## திணைக்களத்தின் செயலாற்றுகை

### 2.1 ஓட்டக்கூடிய மோட்டார் வாகனங்களது புதிய பதிவு

இந்நாட்டில் இறக்குமதி செய்யப்படுகின்ற அல்லது இந்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அல்லது பொருத்தப்பட்ட வாகனங்களை இலங்கையில் முதற்தடவையாக பதிவு செய்தல் இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. இப்பதிவு செய்யும் செயற்பாடுகள் திணைக்களத்தின் 4 கிளைகள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது,

1. மோட்டார் சைக்கிள் புதிய பதிவு கிளை
2. முச்சக்கரவண்டி புதிய பதிவு கிளை
3. வர்த்தக வாகனம் புதிய பதிவு கிளை ஐ (கார், லொறி, இருவித பாவனை வாகனங்கள், சிங்கள் கெப், பிறைமூவர், அவமங்கள வாகனம், அம்புலன்ஸ்)
4. வர்த்தக வாகனங்கள் புதிய பதிவு கிளை ஐஐ (பஸ் வண்டி, டிரக்டர்)

இந்த வாகனங்களது முதலாவது பதிவுச் சான்றிதழை வழங்கும் போது விண்ணப்பதாரிகளால் முன்வைக்கப்படுகின்ற ஆவணங்களது சரியான தன்மையை உறுதிப்படுத்தியதன் பின்னர் பதிவுக் கட்டணங்களை மேற்கொண்டதன் பின்னர், ஒரே நாளில் பதிவுச் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டு உரிய பதிவுச் சான்றிதழ்கள் விநியோகிக்கப்படும்.

2019 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களது எண்ணிக்கை 367,303 ஆகும். அதனடிப்படையில் இதுவரை மொத்தமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களது எண்ணிக்கை 8,095,224 ஆகும். 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட புதிய வாகனங்களின் எண்ணிக்கை 23.61மூ குறைவைக் காட்டுகின்றன. அவை கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.


#### 2.1.1 அட்டவணை: வாகனங்களது எண்ணிக்கை

| வருடம் | எண்ணிக்கை | முழு வாகனங்களது எண்ணிக்கை |
|---|---|---|
| 2011 | 525,421 | 4,479,732 |
| 2012 | 397,295 | 4,877,027 |
| 2013 | 326,651 | 5,203,678 |
| 2014 | 429,556 | 5,633,234 |
| 2015 | 668,907 | 6,302,141 |
| 2016 | 493,328 | 6,795,469 |
| 2017 | 451,653 | 7,247,122 |
| 2018 | 480,799 | 7,727,921 |
| 2019 | 367,303 | 8,095,224 |

**மூலம்: மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்**

2019 ஆம் வருடத்தில் புதிதாக பதிவு செய்யப்பட்ட வாகனங்களது எண்ணிக்கை கீழே வரைபில் காட்டப்பட்டுள்ளது.


### 2.1.1 வரைபு




**மூலம்: மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்**

இலங்கையில் புதிய வாகனங்களது பதிவினைக் கருத்திற் கொள்ளும் போது 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டு அதில் குறைவை காணக்கூடியதாக உள்ளது.

### 2.1.2 வரைபு




**மூலம்: மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்**


### 2.1.2 அட்டவணை: புதிதாகப் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களது வகுப்பு

| வாகன வகுதிகள் | 2018.12.31 ஆந் திகதியில் வாகனங்கள் | 2019.12.31 ஆந் திகதியில் வாகனங்கள் | அதிகரிப்பு /குறைவு சதவீதமாக |
|---|---|---|---|
| மோட்டார் கார் | 80,776 | 38,232 | -52.67 |
| முச்சக்கரவண்டி | 20,063 | 15,490 | -22.79 |
| மோட்டார் சைக்கிள் | 339,763 | 284,301 | -16.32 |
| மோட்டார் பஸ் | 2,957 | 1,613 | -45.45 |
| இருவித பாவனை வாகனம் | 16,931 | 13,459 | -20.51 |
| மோட்டார் லொறி | 9,371 | 5,223 | -44.26 |
| காணி வாகனம் டிரக்டர் | 7,460 | 5,696 | -23.65 |
| காணி வாகனம் டிரேலர் | 2,822 | 1,970 | -30.19 |
| குரோட் சைக்கிள் | 654 | 1,318 | 101.53 |
| மோட்டார் வீடு | 2 | 1 | -50.00 |
| **மொத்தம்** | **480,799** | **367,303** | **-23.61** |

**மூலம்: மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்**

**2019 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட புதிய வாகனங்களது வகுதிகள்**

**2.1.3 வரைபு**




**மூலம்: மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்**


2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு வாகனத் தொகுதிகளிலும் குறைவொன்றைக் காண முடிகின்றது. அத்தோடு மேலே காட்டப்பட்டுள்ள வாகனப் பதிவுகளது எண்ணிக்கையை உற்று நோக்கும்போது நாட்டில் அதிகரிக்கும் வாகனங்களது எண்ணிக்கையில் மோட்டார் கார், முச்சக்கரவண்டிகள், மற்றும் மோட்டார் சைக்கிள்களில் அதிகரிப்பை காணக்கூடியதாக உள்ளது. அந்த மூன்று வாகனத் தொகுதிகளதும் பதிவு எண்ணிக்கைகளை பின்வருமாறு வெவ்வேறாகக் காட்டலாம்.

## 2019 ஆம் ஆண்டில் புதிதாகப் பதிவுசெய்யப்பட்ட மோட்டார் கார்கள்

### 2.1.3 அட்டவணை – புதிதாகப் பதிவு செய்யப்பட்ட மோட்டார் கார்களது தரவுகள்

| மாதம் | வாகனங்களது எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 4,294 |
| பெப்ரவரி | 3,127 |
| மார்ச் | 3,758 |
| ஏப்பிரல் | 2,734 |
| மே | 2,281 |
| ஜூன் | 2,045 |
| ஜூலை | 3,515 |
| ஓகஸ்ட் | 3,321 |
| செப்டெம்பர் | 3,499 |
| ஒக்டோபர் | 3,618 |
| நவம்பர் | 2,999 |
| டிசம்பர் | 3,041 |

2.1.4 வரைபு





மூலம்: மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

### 2.1.4 அட்டவணை :- புதிய பதிவு மோட்டார் கார் தரவுகள் (2011 – 2019)

| வருடம் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட மோட்டார் கார்களின் எண்ணிக்கை | 57,886 | 31,546 | 28,380 | 38,780 | 105,628 | 45,172 | 39,182 | 80,776 | 38,232 |

மூலம்: மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

2.1.5 வரைபு





மூலம்: மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

## 2019 ஆம் ஆண்டில் மோட்டார் சைக்கிள் புதிய பதிவு

### 2.1.5 அட்டவணை :- புதிதாக பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களது தரவு

| மாதம் | வாகனங்களது எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 28,375 |
| பெப்ரவரி | 23,342 |
| மார்ச் | 27,219 |
| ஏப்பிரல் | 21,311 |
| மே | 29,530 |
| ஜுன் | 21,626 |
| ஜுலை | 24,948 |
| ஓகஸ்ட் | 25,730 |
| செப்டெம்பர் | 21,647 |
| ஒக்டோபர் | 22,203 |
| நவம்பர் | 18,754 |
| டிசம்பர் | 19,616 |

2.1.6 வரைபு





மூலம்: மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

### 2.1.6 வரைபு :- புதிதாக பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களது தரவு (2011 – 2019)

| வருடம் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் எண்ணிக்கை | 253,331 | 192,284 | 169,280 | 272,885 | 370,889 | 340,129 | 344,380 | 339,763 | 284,301 |

மூலம்: மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

2.1.7 வரைபு





மூலம்: மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

## 2019 முச்சக்கர வண்டிகளது புதிய பதிவு

**2.1.7 அட்டவணை :- புதிதாகப் பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளது எண்ணிக்கை**

| மாதம் | வாகனங்களது எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | 1,838 |
| பெப்ரவரி | 1,463 |
| மார்ச் | 2,334 |
| ஏப்பிரல் | 1,158 |
| மே | 970 |
| ஜுன் | 916 |
| ஜுலை | 1,235 |
| ஓகஸ்ட் | 1,156 |
| செப்டெம்பர் | 1,074 |
| ஒக்டோபர் | 1,360 |
| நவம்பர் | 1,048 |
| டிசம்பர் | 938 |

**2.1.8 வரைபு**





மூலம்: மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

**2.1.8 வரைபு :- புதிதாக பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளது எண்ணிக்கை (2011 – 2019)**

| வருடம் | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளது எண்ணிக்கை | 138,426 | 98,815 | 83,673 | 79,038 | 129,547 | 56,945 | 23,537 | 20,063 | 15,490 |

மூலம்: மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

**2.1.9அட்டவணை**





மூலம்: மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

புதிதாக பதிவு செய்யப்பட்ட இந்த வாகனங்களில் பயன்படுத்தப்படுகின்ற எரிபொருளின் வகைகளின் அடிப்படையில் பிரதானமாக 03 வகுதிகளின் கீழ் வகைப்படுத்தலாம். அதாவது,

- ✓ பெட்ரோல் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள்
- ✓ டீசல் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்கள்
- ✓ பிற
    - பெட்ரோல் / இலெக்ரிகல் வாகனம்
    - டீசல் / இலெக்ரிகல் வாகனம்
    - இலெக்ரிகல் வாகனம்
    - எரிபொருள் பயன்படுத்தப்படாத வாகனம்

### 2.1.10 வரைபு





**மூலம்: மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்**

2019 ஆம் ஆண்டில் பெட்ரோலைப் பயன்படுத்தி ஓடக்கூடிய வாகனங்கள் 335,862 மற்றும் டீசலைப் பயன்படுத்தி ஓட்டக்கூடிய வாகனங்கள் 20,822 பதிவு செய்யப்பட்டுள்ளன. பெட்ரோலைப் பயன்படுத்தி ஓட்டக்கூடிய வாகனங்களது எண்ணிக்கையானது மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட வாகனங்களது எண்ணிக்கையில் 91மூ ஆகும்.

## 2.2 வாகன உரிமை மாற்றங்களைப் பதிவு செய்தல்

பதிவு செய்யப்பட்ட வாகனங்களை மீளவும் உரிமை மாற்றம் செய்தலைக் கவனத்திற் கொள்ளும் போது 2019ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட உரிமை மாற்றங்களின் எண்ணிக்கை 675,018 ஆகும். வாகன உரிமை மாற்றங்களில் ஏற்பட்ட போக்குகள் கீழே காட்டப்பட்டுள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளது. இதனூடாக நாட்டில் மக்களிடையே வாகனங்களது உரிமை கைமாறும் இயல்பு எடுத்துக் காட்டப்படுகின்றது. ஒவ்வொரு வருடத்திலும் உரிமை மாற்றங்கள் அதிகரித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

### 2.2.1 வரைபு




**மூலம்: மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்**


மேற்காட்டப்பட்ட வரைபின் அடிப்படையில் 2018ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 668,295 எண்ணிக்கையைக் கொண்ட உரிமை மாற்றங்களுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட உரிமை மாற்றங்கள் 675,018 ஆகும்.

2019 ஆம் ஆண்டில் உரிமை மாற்றங்களது எண்ணிக்கை அந்தந்த வாகனங்களது வகுதிகளின் அடிப்படையில் கீழே காட்டப்பட்டுள்ளது.

### 2.2.1 அட்டவணை :- வாகன உரிமை மாற்ற உள்ளீடு

| வாகனங்களது வகை | 2018 | 2019 |
|---|---|---|
| கார் உரிமை மாற்றம் | 137,912 | 136,618 |
| முச்சக்கரவண்டி / முச்சக்கரவண்டி வேன் / முச்சக்கரவண்டி கார் உரிமை மாற்றம் | 215,926 | 221,006 |
| முச்சக்கர வண்டி உரிமை மாற்றம் | 135,865 | 163,399 |
| வர்த்தக வாகனங்களது உரிமை மாற்றம் | 96,640 | 84,582 |
| லொறி உரிமை மாற்றம் | 51,962 | 45,374 |
| பஸ் உரிமை மாற்றம் | 18,163 | 14,246 |
| காணி வாகன உரிமை மாற்றம் | 11,827 | 9,792 |
| மோட்டார் வீடு | - | 1 |
| **மொத்தம்** | 668,295 | 675,018 |

### 2.2.2 வரைபு




**மூலம்: மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்**

## 2.3 சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் சேவைகள்

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாடுகளும் அதன் இயல்புகளும் திணைக்களம் ஆரம்பித்த நாள் தொடக்கம் பல்வேறு பரிணாமங்களைக் கண்டுள்ளதுடன் தற்போது சர்வதேச மட்டத்திலான ஸ்மார்ட் கார் சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. இந்த சாரதி அனுமதிப்பத்திரங்களை முறையற்ற விதத்தில் அச்சிடப்படுவதைத் தடை செய்வதற்காக உயர் தரத்திலான பாதுகாப்பு மூலோபாயங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் இவ்வனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களது இரத்த வகையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. வேரஹெர அலுவலகத்தை மையமாகக் கொண்டு ஏனைய மாவட்ட அலுவலகங்களிலும் பின்வரும் இரண்டு முறையில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. அதாவது,

1. **ழுடு டைநெ தொடர்புகள்**

   இம்முறையின் ஊடாக சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற வரும் ஒரு விண்ணப்பதாரியின் அடிப்படைத் தகவல்கள் கணனிமயப்படுத்தப்பட்டு அந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாகவே புகைப்படங்களைப் பெற்றுக் கொள்ளுதல், கைவிரல் அடையாளம், அதற்குரிய அடிப்படை ஆவணைங்களை ஸ்கேன் செய்தல், தரவு கட்டமைப்பிற்கு தகவல்களை சேர்த்து உறுதிப்படுத்தியதன் பின்னர் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். இதற்கு புறம்பாக எழுத்துமூலப் பரீட்சை நடாத்தப்பட்டு அச்சந்தர்ப்பத்திலேயே தரவுத் தளத்திற்கு சாரதி

அனுமதிப்பத்திரத்தின்பிரதியொன்றை கோரும் சந்தர்ப்பத்தில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வழங்கப்படும். இதற்கு வேரஹெர அலுவலகத்தை மையமாகக் கொண்டு அம்பாந்தோட்டை, அநுராதபுரம், கம்பஹா, களுத்துறை, குருணாகல், மொணறாகலை, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் சாரதி அனுமதிப்பத்திர செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

**2. முகக டுறெ தொடர்புகள்**

ஏனைய மாவட்டங்களில் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது எழுத்துமூலப் பரீட்சைகளை நடாத்துதல், படிவங்கள் ஊடாக அனுமதிப்பத்திரங்கள் மற்றும் ஆவணங்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அத்தகவல்களை உறுதிப்படுத்தி வேரஹெர அலுவலகத்திற்கு அனுப்பி சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயற்பாட்டில் ஏனைய மாவட்ட அலுவலகங்களும் இதே நடைமுறையைக் கடைப்பிடிக்கின்றன. தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

**2.3.1 அட்டவணை :- சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் 2019**

| மாதம் | எண்ணிக்கை |
|---|---|
| ஜனவரி | **72,285** |
| பெப்ரவரி | **64,456** |
| மார்ச் | **66,623** |
| ஏப்பிரல் | **66,569** |
| மே | **76,793** |
| ஜுன் | **71,112** |
| ஜுலை | **81,955** |
| ஓகஸ்ட் | **92,881** |
| செப்டெம்பர் | **81,537** |
| ஒக்டோபர் | **93,099** |
| நவம்பர் | **75,607** |
| டிசம்பர் | **74,812** |
| **மொத்தம்** | **917,729** |

| வகை | 2019.12.31 ஆந் திகதியில் |
|---|---|
| மாற்றம் | 51,220 |
| திருத்தம் | 40,577 |
| பிரதி | 50,961 |
| வாகன வகுப்புகளை சேர்த்தல் | 67,329 |
| புதிய சாரதி அனுமதிப்பத்திரம் | 313,644 |
| புதுப்பித்தல் | 391,006 |
| வெளிநாட்டு அனுமதிப்பத்திரத்திற்கு மாற்றுதல் | 2,992 |
| **மொத்தம்** | **917,729** |

**மூலம்: மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்**

2019 டிசம்பர் 31ஆந் திகதி வரை வழங்கப்பட்டுள்ள மொத்த சாரதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை **917,729** ஆகும். வேரஹெர அலுவலகத்தில் சாரதி அனுமதிப்பத்திரங்கள் அச்சிடப்படுவதற்குப் புறம்பாக அநுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட

அலுவலகங்களில் சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்கான இயந்திரம் தாபிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களமானது தகவல் தொழிநுட்பத்தில் ஒருபடி முன்னே சென்று சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான எழுத்துமூலப பரீட்சையை கணனி ஊடாக (வுழரஉா ளுஉசநநெ) நடாத்தியது. எதிர்காலத்தில் ஏனைய மாவட்டங்களுக்கும் இச்சலுகை வழங்கப்படவுள்ளது.

## 2.4 மோட்டார் வாகனங்கள் தொடர்பான தொழிநுட்ப சேவைகள்

- பிரதான அலுவலகத்திலும் வேரஹெர உப அலுவலகத்திலும் மாவட்ட அலுவலகங்களிலும் பின்வரும் தொழிநுட்ப சேவைகள் வழங்கப்படுகின்றன.
- சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பான எழுத்துப் பரீட்சையையும் செயன்முறைப் பரீட்சையையும் நடாத்துதல்.
- வாகனங்களைப் பரிசோதித்து சான்றிதழ்களை வழங்குதல், அடையாள சான்றிதழ்களை வழங்குதல்.
- அரச வாகனங்களுக்கு பொருத்தப்பாட்டு சான்றிதழை வழங்குதல்.
- வாகனம் தொடர்பான பெறுகை குழுவில் பங்குபற்றுதல், வாகனப் பதிவை இரத்துச் செய்வதற்கான சிபாரிசுகளை வழங்குதல்.
- கராஜ்களை பதிவு செய்தல் மற்றும் வருடாந்த அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல்.
- ஊஆவு செசி இலக்கம், டிரேலர் செசி இலக்கம் வழங்குதல்.
- சாரதி ஆலோசகர் பாடநெறி மற்றும் தொழிநுட்ப பிரிவிற்குரிய பயிற்சி பாடநெறிகளைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.
- பாரிய விபத்துக்கள் தொடர்பில் வாகனங்களைப் பரிசோதித்து, உரிய அவதானிப்புக்களை நீதிமன்றத்திற்கு அறிக்கையிடுதல்.

பிரதான அலுவலகம் உட்பட ஏனைய அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற தொழிநுட்ப சேவைகள் பிரதானமாக 20 வகுதிகளின் கீழ் வகைப்படுத்த முடிவதுடன், அந்த ஒவ்வொரு வகுதிக்கும் உரிய விபரங்கள் பின்வருமாறு சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

### 2.4.1 அட்டவணை :- தொழிநுட்ப சேவைகள்

| | பணிகள் | 2018 | 2019 |
|---|---|---|---|
| 1 | சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான எழுத்துமூலப் பரீட்சைகளை நடாத்துதல் | 479,615 | 204,398 |
| 2 | சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான செயன்முறைப் பரீட்சைகளை நடாத்துதல். | 693,478 | 392,181 |
| 3 | இலக்கத் தகடுகளை விநியோகித்தல் (கொழும்பு) | 587,097 | 597,633 |
| 4 | இலக்கத் தகடுகளை விநியோகித்தல் (பிற மாவட்டங்கள்) | 148,758 | 107,057 |
| 5 | கராஜ், புதிய வர்த்தக நிறுவனங்களை பரிசோதித்தல். | 258 | 53 |
| 6 | கராஜ், புதிய வர்த்தக நிறுவனங்களை பதிவு செய்தல். | 251 | 72 |
| 7 | கராஜ், புதிய வர்த்தக நிறுவனங்களது பதிவுகளை புதுப்பித்தல் | 869 | 937 |
| 8 | சாரதி பாடசாலைகளை பரிசோதித்தல் | 14 | 28 |
| 9 | நகல் மாதிரிகளை விநியோகித்தல் | 128 | 112 |
| 10 | ஊ.ஆ.வு. செசி இலக்கத்தை விநியோகித்தல். | 21 | 3 |
| 11 | ட்ரேலர் செசி இலக்கத்தை விநியோகித்தல் | 2,290 | 1,434 |
| 12 | சுங்க ஏலவிற்பனை வாகனங்களுக்கு ஊ.ஆ.வு. செசி இலக்கம் வழங்குதல் | 34 | 8 |
| 13 | மோட்டார் சைக்கிள்களைப் பரிசோதித்தல் | 532 | 159 |
| 14 | நிறை சான்றிதழ் விநியோகம் | 10,215 | 6,061 |
| 15 | அடையாள சான்றிதழ் வழங்குதல் | 1,384 | 855 |
| 16 | தடைக் கட்டளைகளை வழங்குதல் | 2,012 | 1,377 |
| 17 | தடைக் கட்டளைகளை அகற்றுதல் | 1,637 | 1,364 |
| 18 | வாகன விபத்துப் பரிசோதனை | 5,713 | 3,848 |
| 19 | விசேட கடமைகளில் ஈடுபடுதல் | 407 | 305 |

## 2.5 புகை தர நிர்ணய பரிசோதனைகளைக் கண்காணித்தல்

சுற்றாடல் மாசடைவதைத் தவிர்த்து ,சுற்றாடல் மாசடையக் கூடியவாறான வாகனங்களில் இருந்து வெளியேற்றப்படுகின்ற புகையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 2008சனவரி மாதம் 25ஆந் திகதி வெளியிடப்பட்ட இல 17/1533 ஐக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியின் கட்டளை மற்றும் 2009 ஆண்டின் 08 ஆம் இலக்கமுடைய மோட்டார் வாகன (திருத்தப்பட்ட) சட்டத்திற்கு அமையவும் ,இல . 14/1557தேசிய சுற்றாடல் குறித்த (புகை தரநிர்ணய எரிபொருள் மற்றும் வாகன இறக்குமதி நியமங்கள்) அதி விசேட வர்த்தமானிக்கமைய 2008நவம்பர் மாதம் 17ஆந் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்படும் வகையில் புகை தரநிர்ணய பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன .அவ்வாறே புதிய தரநியமங்கள் 2014.11.05ஆந் திகதி வெளியிடப்பட்டதுடன் ,

அத் தரநியமங்கள் 2016செப்தெம்பர் 15ஆந் திகதியில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது . அவை பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் மக்களுக்கும் அது குறித்து விழிப்பூட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன .

அவ்வாறேஇ வாயு சுற்றோட்ட நிலைமைகளைப் பரசோதிப்பதற்கான உபகரணம் தொடர்பான கேள்வி நடைமுறைகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன்இ அவ்வாயு சுற்றோட்ட நிலைமைகளை அளவிடும்இ நிலையான 02 மத்திய நிலையங்கள்இ மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வளாகத்திலும் கண்டி நகரத்திலும் நிறுவப்பட்டுள்ளதுடன்இ வாயு நிலைமைகளை அளவிடுவதற்கான நடமாடும் அலகொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வுபகரணங்களின் ஊடாக வாயு நிலைமைகளை அளவிடுவதற்காகஇ மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அவ்வுபகரணங்ளை உரிய முறையில் ஒப்படைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வுபகரணங்கள் ஊடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளைஇ வாகன புகைப் பரசோதனை கருத்திட்டத்தின் விளைவுகளை ஆய்வுசெய்வதற்குப் பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது.





**புகை நிலைமையை பரிசோதிக்கும் நிலையான அலகு** **நடமாடும் அலகு**



**புகை நிலைமைகளை அளவிடும் அலகுகளிடையே தாபிக்கப்பட்டுள்ள ஊழு2இ ழு3இ ீஆஇ ளுழு2இ ழ்ழு2 புகைகளை அளவிடும் உபகரணம்**

அவ்வாறே நடமாடும் புகை தரநிர்ணய பரிசீனை உபகரணங்கள் தொடர்பான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ,பேராதனை மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகங்கள் மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்துடன் புகை தரநிர்ணய அளவீடு மற்றும் அது குறித்த ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வீதிகளில் ஓட்டிச் செல்லப்படுகின்ற வாகனங்களைப் பரீட்சிப்பதற்காக குழுக்களாக இணைந்து வீதிப் பரிசோதனை மற்றும் ஸ்தலப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் .அதன்போது 5,135 வீதிப் பரிசோதனைகள்இ ஆண்டின் சனவரி மாதத்தில் இருந்து டிசம்பர் 31வரை மேற்கொள்ளப்பட்டுள்ளன .அக் காலப்பகுதியில் 4,182 புகை கசியும் வாகனங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் உரிமையாளர்கள் அறிவுறுத்தப்பட்டுஇ அவற்றை பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. **அவ்வாறே இலங்கை இராணுவப் படை மற்றும் இலங்கை வான்படைக்கு சொந்தமான 2,208 வாகனங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.**

மேலும் ,வாகன புகை தரநிர்ணய பரிசோதனை நிலையங்களினால் .2018.01 க்லின்கோ லங்கா மற்றும் லாப் கோ ஸ்ரீ ஆகிய இரு நிறுவனங்களின் மூலம் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் வாயு தரநிர்ணயப் பிரிவின் கண்காணிப்பின் கீழ் 431நிலையங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன .தற்போது 191 நிலையங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ,அவற்றில் கண்டறியப்பட்ட பொதுவான பிரச்சினைகளாக பகுதியளவு அசையா மற்றும் அசையும் நிலையங்களில் வாடிக்கையாளர்களுக்கு போதி இடவசதியின்மைஇ கட்புலப் பரிசோதனைகள் உரியவாறு மேற்கொள்ளப்படாமைஇ பரிசோதனை நடைமுறை மீறப்படல்இ வாயு தரநிர்ணய பரிசோதனை உரியவாறு நடைமுறைப்படுத்தப்படாமைஇ வாயு தரநிர்ணய பரிசோதனை உரியவாறு பராமரிக்கப்பட்டுஇ அளவீடு செய்யப்படாத சந்தர்ப்பங்கள் மற்றும் உபகரணங்கள் செயற்படாத போது மலதிக

பரிசோதனை உபகரணங்கள் இன்மை என்பன காரணமாக அவற்றை மூடி விடுவதற்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.




**மத்திய நிலையங்களை பார்வையிடல்**



**வீதிப் பரிசோதனை**



**அதே இடத்திலான பரிசோதனை**

## 2.6 வீதிப் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகளை வகுத்தல்

திணைக்களத்தின் பிரதான செயற்பாடுகளுக்குப் புறம்பாக வீதிப் பாதுகாப்புகளை உறுதி செய்வதற்காக வெளியார் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பல்வேறு நிகழச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது. அதனடிப்படையில் இதுவரை பிரதான பரீட்சார்த்த கருத்திட்டங்கள் சில நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதாவது,

- வீதிப் போக்குவரத்து சாரதி அனுமதிப்பத்திர கட்டளை நடைமுறைப்படுத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டமை.
- வீதிகளில் ஓட்டிச் செல்ல முடியாத வாகனங்களைப் பரிசோதித்து அவ் வாகனங்களை வீதிகளில் இருந்து அப்புறப்படுத்துவது சம்பந்தமான பணிகளில் வளப்பங்களிப்பினை வழங்குதல்.

- வீதிப் போக்குவரத்து சாரதி அனுமதிப்பத்திர கட்டளையை நடைமுறைப்படுத்தும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டமை.
- வீதிகளில் ஓட்டிச் செல்ல முடியாத வாகனங்களைப் பரிசோதித்து அவ்வாகனங்களை வீதிகளில் இருந்து அப்புறப்படுத்துவது தொடர்பான பணிகளில் வளவாளர்களாக செயற்படுதல்.
- தடைக் கட்டளைகளை வழங்குதல்
- வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை ஊடாக நடாத்தப்படுகின்ற பாடநெறிகளை நடாத்துதல் மற்றும் வளவாளர்களை வழங்குதல்.





**ஓட்டுவதற்கு பொருத்தமற்ற வாகனங்களைப் பரிசோதித்தல்**

## எதிர்கால நோக்கு

- நு – அழவழசபைெ கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதற்கு சமமாக அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு துறைமுகத்தை அண்டியதாக அலுவலகமொன்றை தாபித்தல்.
- இதுவரை சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல் தொடர்பானஒன்லைன் சேவைகள் (ழுெ டுைநெ) அற்ற மாவட்ட அலுவலகங்களுக்கு ஒன்லைன் சேவைகளை வழங்குதல் (ழுெ டுைநெ)
- அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கும் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான எழுத்துமூலப் பரீட்சையை கணனி மூலம் (வுழரஉா ளுஉசநநெ) நடாத்துதல்
- மாவட்ட அலுவலகங்களில் அடையாளங் காணப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

# 03 அத்தியாயம்

## 2019 டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான மொத்த நிதி செயலாற்றுகை

## 3.1 நிதி செயலாற்றுகை கூற்று

ஏசீஏ – எப்

**2020.12.31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதி செயலாற்றுகை கூற்று**

| வரவுசெல வுத்திட்டம் (நிகழ் நிதியாண்டு) | | குறிப்பு | உண்மை ரூ. 2019 | | உண்மை ரூ. 2018 | |
|---|---|---|---|---|---|---|
| | **வருமானம் பெறுவனவு** | | | | | |
| | | | | | | |
| | வருமான வரி | 1 | - | | - | ஏசீஏ - 1 |
| | உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகள் வரி | 2 | 3,598,674,964.00 | | 1,129,288,149.00 | ஏசீஏ - 1 |
| | சர்வதேச வர்த்தகத்தின் மீதான வரி | 3 | - | | - | ஏசீஏ - 1 |
| | வரியல்லா வருமானம் மற்றும் பிற | 4 | 10,303,007,093.00 | | 10,472,489,559.00 | ஏசீஏ - 1 |
| | **மொத்த வருமானம் பெறுவனம் (அ)** | | **13,901,682,057.00** | | **11,601,777,708.00** | |
| | | | | | | |
| | **வருமானமல்லா பெறுவனவுகள்** | | - | | - | |
| | திறைசேரி நிதி | | 14,359,970.00 | | 24,629,105.00 | ஏசீஏ - 3 |
| | வைப்புக்கள் | | 1,946,451,261.00 | | 2,641,737,751.00 | ஏசீஏ - 4 |
| | முற்பணக் கணக்கு | | 35,985,794.00 | | 35,138,489.00 | ஏசீஏ – 5/5 (அ) |
| | பிற கிடைப்பனவுகள் | | - | | 273,262,450.00 | |
| | **மொத்த வருமானமல்லா கிடைப்பனவு (ஆ)** | | 1,996,797,025.00 | | - | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **மொத்த வருமான பெறுவனவு மற்றும் வருமானமல்லா பெறுவனவு இ ஸ்ரீ (அ)ூ (ஆ)** | | **15,898,479,082.00** | - | |
| | | | | | |
| | கழித்தல் செலவு | | | | |
| | **மீண்டெழும் செலவுகள்** | | - | - | |
| | சம்பளம், படிகள், மற்றும் ஏனைய ஊழியர் பயன்கள் | 5 | 479,304,309.00 | 433,044,297.00 | |
| | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் நிவாரணம், | 6 | 1,205,896,392.00 | 1,659,886,758.00 | ஏசீஏ - 2 (ஐஐ) |
| | கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | - | - | |
| | வட்டி கொடுப்பனவு | 8 | 7,293,287.00 | 7,284,239.00 | |
| | பிற மீண்டெழும் செலவுகள் | 9 | - | - | |
| | **மொத்த மீண்டெழும் செலவுகள் (இ)** | | **1,692,493,988.00** | - | |
| | **மூலதனச் செலவுகள்** | | | | |
| | மூலதனச் சொத்துக்கள் | | | | |
| | புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி | 10 | 10,188,425.00 | 9,452,799.00 | |
| | மூலதனச் சொத்துக்களை எடுத்தல் | 11 | 10,913,207.00 | 71,514,949.00 | |
| | மூலதன உரிமை மாற்றங்கள் | 12 | - | - | ஏசீஏ - 2 (ஐஐ) |
| | நிதிச் சொத்துக்களை எடுத்துக் கொள்ளுதல் | 13 | - | - | |
| | திறன் விருத்தி | 14 | 1,015,915.00 | 1,680,570.00 | |
| | பிற மூலதனச் சொத்துக்கள் | 15 | 1,579,354,586.00 | 1,099,967,495.00 | |
| | **மொத்த நிதிச் சொத்துக்கள் (உ)** | | **1,601,472,133.00** | | |
| | | | | | |
| | **பிரதான லெஜர் செலவுகள் (ஊ)** | | **1,944,812,661.00** | 2,814,673,207.00 | ஏசீஏ - 4 |
| | வைப்பு செலவுகள் | | 1,907,825,915.00 | 2,766,988,662.00 | ஏசீஏ – 5/5(அ) |
| | முற்பண செலவுகள் | | 36,986,746.00 | 47,684,545.00 | |
| | **திறைசேரி பரிமாற்றல்கள்** | | **3,646,102,902.00** | | |
| | **மொத்த செலவுகள் எ ஸ்ரீ (இ)ூ உூ ஊ)** | | **8,884,881,684.00** | 6,097,504,314.00 | |
| | 2019 டிசம்பர் 31ஆந் திகதியில் கட்டுநிதி மீதி ஏ ஸ்ரீ (இ-எ) | | **7,013,597,398.00** | | |

## 3.2 நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று

**ஏசீஏ - பீ2019**

**டிசம்பர் 31ஆந் திகதியில் நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று**

| | குறிப்பு | உண்மை நிலை | |
|---|---|---|---|
| | | 2019<br>ரூ. | 2018<br>ரூ. |
| **நிதியல்லா சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள் | ஏசீஏ - 6 | 2,323,971,920.00 | 2,146,269,826.00 |
| | | | |
| **நிதிச் சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ – 5/5(அ) | 130,267,131.00 | 129,083,883.00 |
| நிதி மற்றும் சமமான விடயங்கள் | ஏசீஏ - 3 | 1,102,904.00 | 46,544,011.00 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **2,455,341,955.00** | **2,321,897,720.00** |
| | | | |
| **தேறிய சொத்துக்கள் / அளவு** | | | |
| தேறிய சொத்துக்கள் | | (115,335,847.00) | (77,893,749.00) |
| சொத்துக்கள், பொறிமுறைகள் மற்றும் உபகரணங்கள் | | 2,323,971,920.00 | 2,146,269,826.00 |
| குழாம் | | | |
| கூலி மற்றும் வேலை முற்பண குழுமம் | ஏசீஏ - 5(ஆ) | | |
| | | | |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்கு | ஏசீஏ - 4 | 245,602,978.00 | 206,977,632.00 |
| கட்டுநிதி மீதி | ஏசீஏ - 3 | 1,102,904.00 | 46,544,011.00 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **2,455,341,955.00** | **2,321,897,720.00** |

பக்க இலக்கம் …. முதல் …. வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 6 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் …. முதல் …. வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம்

வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| .............................. | ............................ | .......................................... |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பிரதான நிதி உத்தியோகத்தர் / பிரதான கணக்காளர் |
| பெயர் : | பெயர் : | பணிப்பாளர் (நிதி) /ஆணையாளர் (நிதி) |
| பதவி : | பதவி : | பெயர் : |
| திகதி : | திகதி : | திகதி : |

## 3.3 நிதி பாய்ச்சல் தொடர்பான கூற்று

ஏசீஏ **- சீ**

2019 டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி பாய்ச்சல் தொடர்பான கூற்று

| | **உண்மை நிலை** | |
|---|---|---|
| | **2019 ரூ.** | **2018 ரூ.** |
| | | |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | 147,134,921.00 | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | 10,303,007,093.00 | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 14,359,970.00 | - |
| பிற திணைக்களங்கள் / அமைச்சுக்களின் ஊடாக சேகரிக்கப்படுகின்ற வருமானம். | - | - |
| கட்டுநிதி பெறுவனவுகள் | - | - |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **10,464,501,984.00** | - |

| | | |
|---|---|---|
| | | |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 6,361,750,117.00 | - |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | - | - |
| பிற செலவுத் தலைப்புக்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் | - | - |
| திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதி | 3,646,102,905.00 | - |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **10,007,853,022.00** | - |
| | | |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **456,648,962.00** | - |
| | | |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| பௌதீக சொத்துக்களின் சொத்துக்களின் விற்பனை | - | - |
| வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள் | - | - |
| முற்பணங்களை அறவிடுதல் | 491,848.00 | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **491,848.00** | - |
| | | |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |
| பௌதீக சொத்து நிருமாணம் அல்லது கொள்வனவு மற்றும் வேறு முதலீகளைக் கொள்வனவு செய்தல். | 393,432,000.00 | - |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 24,129,703.00 | - |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **417,561,703.00** | - |

| | | |
|---|---|---|
| | | |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ-ஊ)** | **(417,069,855.00)** | **-** |
| | | |
| **தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகளினால் உருவான தேறிய நிதி பாய்ச்சல் (எ)=( இ) + (ஊ)** | **39,579,107.00** | - |
| | | |
| **<u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| வைப்பு பெறுவனவுகள் | 1,946,451,261.00 | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **1,946,451,261.00** | - |
| **<u>கழி – நிதி செலவீனங்கள்</u>** | | |
| உள்நாட்டு கடன்களை மீளச் செலுத்துதல் | - | - |
| வெளிநாட்டு கடன்களை மீளச் செலுத்துதல் | - | - |
| வைப்புக் கொடுப்பனவு | 1,907,825,915.00 | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட மொத்த நிதி பாய்ச்சல் (ஐ)** | **1,907,825,915.00** | - |
| | | |
| **நிதிச் செயற்பாடுகளின் ஊடாக உருவாக்கப்பட்ட நிதிப் பாய்ச்சல் (ஒ) = (ஏ) – (ஐ)** | **38,625,346.00** | - |
| | | |
| **நிதிகளின் தேறிய மாற்றங்கள் (ஔ) = (எ) – (ஒ)** | **953,761.00** | - |
| | | |
| **ஜனவரி 01 ஆம் திகதியில் ஆரம்ப நிதி மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆந் திகதியில் இறுதி காசு மீதி** | **953,761.00** | - |

## 3.4 நிதிக் கூற்றுக்களது குறிப்பு

## 3.5 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

**ரூ. ,000**

| அரசிறை குறியீடு | வருமான குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | மூல மதிப்பீடு | திருத்திய மதிப்பீடு | அளவு (ரூ.) | இறுதி வருமானம் மதிப்பீட்டின் மூமாக |
| | **<u>உள்நாட்டு பொருட்கள் மற்றும் சேவைகளின் மீது வரி</u>** | | | | |
| 1003 | அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் பிற | | | | |
| 1003.01.00 | அதிசொகுசு மோட்டார் வாகன வரி | 1,100,000,000.00 | 850,000,000.00 | 1,859,524,152.00 | 218.77 |
| 1003.02.00 | உரிமை மாற்ற வரி | | | | |
| 1003.07.00 | ஏனைய அனுமதிப்பத்திர கட்டணம் | | | | |
| 1003.07.04 | மோட்டார் வாகனங்களை விற்பனை செய்வதன் மீதான வரி | 80,000,000.00 | 80,000,000.00 | 83,925,559.00 | 104.91 |
| 1003.07.09 | காபன் வரி | 2,000,000,000.00 | 140,000,000.00 | 1,655,225,252.00 | 1,182.30 |
| | | **3,180,000,000.00** | **1,070,000,000.00** | **3,598,674,963.00** | 336.32 |
| | | | | | |
| | **<u>வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்</u>** | | | | |
| 2003.02.14 | மோட்டார் வாகன போக்குவரத்து சட்டத்தின் கீழ் அறவிடப்படுகின்ற கட்டணங்கள் மற்றும் பிற | 11,500,000,000.00 | 9,500,000,000.00 | 10,288,597,976.00 | 108.30 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2003.02.15 | சலுகை ரீதியான மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்குதலின் கீழ் மோட்டார் வாகனங்களை உரிமை மாற்றும் போது அறவிடப்படுகின்ற பதிவு செய்தல் கட்டணம் | 10,000,000.00 | 10,000,000.00 | 14,409,116.00 | 144.09 |
| | **ஏனைய வழிகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் (ஆ)** | | | | |
| | **மொத்த வரியல்லா வருமானம் (அ)+(ஆ)** | 11,510,000,000.00 | 9,510,000,000.00 | 10,303,007,092.00 | 108.34 |
| | **மொத்த வருமானம்** | **14,690,000,000.00** | **10,580,000,000.00** | **13,901,682,055.00** | **131.40** |

## 3.6 ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளை பயன்படுத்தும் செயலாற்றுகை

**ரூ. ,000**

| ஒதுக்கீட்டின் வகை | ஒதுக்கப்பட்ட ஒதுக்குகள் | | உண்மை செலவீனம் | பயன்படுத்தப்பட்ட ஒதுக்குகள், முடிக்கப்பட்ட இறுதி ஒதுக்குகளது மூ மாக |
|---|---|---|---|---|
| | ஆரம்ப ஒதுக்கு | இறுதி ஒதுக்கு | | |
| **மீண்டெழும்** | 2,315,000,000.00 | 2,067,731,000.00 | 1,692,493,988.00 | 81.85 |
| **மூலதனம்** | 1,814,000,000.00 | 2,067,932,000.00 | 1,601,472,133.00 | 77.44 |

### 3.7 நி.பி.208இன் பிரகாரம், பிற அமைச்சுக்கள் / திணைக்களங்களது பிரதிநியாக இத்திணைக்களத்திற்கு / மாவட்டச் செயலகத்திற்கு / மாகாண சபைக்கு பெறப்பட்ட

ரூ. ,000

| தொடர் இல. | ஒதுக்குகளை பெற்றுக் கொண்ட அமைச்சு மற்றும் திணைக்களம் | ஒதுக்கின் நோக்கம் | ஒதுக்கு | | உண்மை செலவு | பயன்படுத்தப்பட்ட ஒதுக்குகள், வழங்கப்பட்ட இறுதி ஒதுக்குகளது மூமாக |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப ஒதுக்கு | இறுதி ஒதுக்கு | | |
| - | - | - | - | - | - | - |
| | | | | | | |

### 3.8 நிதியல்லா சொத்துக்களை அறிக்கையிடலின் செயற்றிறன்

ரூ. ,000

| சொத்து குறியீடு | குறியீட்டின் விபரம் | 31.12.2019 ஆந் திகதியில் பொருட் சுற்றாய்வு அறிக்கையின் அடிப்படையில் மீதி | 31.12.2019 ஆந் திகதியில் நிதி நிலைமை அறிக்கையின் அடிப்படையில் மீதி | எதிர்காலத்தில் கணக்கீட்டிற்கு உட்பட்ட | முன்னேற்றத்தினை மூமாக அறிக்கையிடுதல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் | | 213,177,045.00 | | |
| 9152 | இயந்திரங்கள் | | 177,702,093.00 | | |
| 9153 | காணி | | | | |
| 9154 | கட்புலனாகா சொத்துக்கள் | | | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | | | | |
| 9160 | செய்யப்படுகின்ற வேலைகள் | | 273,453,154.00 | | |
| 9180 | வாடகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் | | | | |

### 3.9 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இணைப்பு 1இல் காட்டப்பட்டுள்ளது

# 04 ஆம் அத்தியாயம்

## 4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை குறியீடு (செயலாற்றுகை அறிக்கையின் அடிப்படையில் அமைந்த)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை திட்டத்தின் அடிப்படையில் அமைந்த பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அடையாளங்காணப்பட்டிருந்ததுடன் அந்த ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விசேட அளவுகோல் | எதிர்பார்க்கப்பட்ட முடிவின் சதவீதமாக (%) உண்மை முடிவு | | |
|---|---|---|---|
| | 100% - 90% | 75% - 89% | 50% - 74% |
| பௌதீக வளங்கள் அபிவிருத்தியின் கீழ் நிருமாணம் மற்றும் திருத்தங்களது பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் | | | 71% |
| நிலையான சொத்துக்களை கையகப்படுத்துதலின் கீழ் கட்புலனாகா மற்றும் மென்பொருள்களை கையகப்படுத்தலின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் | | | 60% |
| மனித வள அபிவிருத்திக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் நிதி முன்னேற்றம் | 95% | | |
| நிதி முதலீட்டின் கீழ் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் | 100% | | |

- அரச திணைக்களங்களுக்கிடையே நீண்ட கால வரலாற்றைக் கொண்ட இத்திணைக்களமானது பிரதான அலுவலகம் மற்றும் வேரஹெர மற்றும் மாவட்ட அலுவலகங்களை தன்னகத்தே கொண்டு செயற்படுகின்றது. இத்திணைக்களத்திற்குச் சொந்தமான கட்டிடங்கள் பழமை வாய்ந்ததாகையால் அவற்றை அடிக்கடி திருத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. எனவே அத்தியாவசிய நிருமாணங்கள் மற்றும் திருத்தங்களுக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியுள்ளது. அதனடிப்படையில் கடந்த வருட செயற்றிட்டத்தில் இவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருந்ததுடன் 71% பௌதீக மற்றும் நிதி முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு இதன் மூலம் முடிந்தது. சிற்சில பின்னடைவுகளுடன் இந்த முன்னேற்றத்தைப் பெற்றுக் கொள்வதற்கு காரணமாக இருந்த சில விடயங்களிடையே

உத்தேச மதிப்பீடுகளை தயாரித்துக் கொள்ளுதல் போன்ற தொழிநுட்ப செயற்பாடுகளுக்கு வெளியார் நிறுவனங்களது உதவிகளைப் பெற்றுக் கொண்டமையும் அதற்கான பயிற்றப்பட்ட வளங்கள் இத்திணைக்களத்திடம் காணப்படாமையும் பிரதானமான காரணங்களாகக் குறிப்பிடலாம்.

- எமது திணைக்களமானது யு தரத்தைக் கொண்ட ஒரு திணைக்களம் என்ற ரீதியில் வருடாந்தம் பாரியளவு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்ற ஒரு நிறுவனமாகும். மோட்டார் வாகன பதிவு மற்றும் சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயற்பாடுகளுக்காக வருகின்ற அதிகளவான சேவைபெறுநர்களுக்கு வினைத்திறனான சேவையை உடனடியாக வழங்குவதற்குத் தேவையான தொழிநுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் திருத்தச் செயற்பாடுகளுக்கு விசேட கவனத்தைச் செலுத்தவேண்டியேற்பட்டது. மேலும் உயர் மட்டத்திலான சேவைகளை வழங்குவதற்கு மென்பொருள்களை அபிவிருத்தி செய்வதற்கு நீண்ட கால கருத்திட்டங்கள் சிலவற்றை வெளியார் நிறுவனங்களுடன் எமது திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. அதனடிப்படையில் 60%மான முன்னேற்றத்தை எமது திணைக்களம் அடைந்து கொண்டுள்ளது.

- திணைக்களத்தின் மனிதவள அபிவிருத்தி தொடர்பாக பகுப்பாய்வு செய்து நோக்கும்போது திணைக்களம்சார் உள்ளக ஆளனியினரும் ஒருங்கிணைந்த சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தொடர்ச்சியாக பயிற்சிகள் மற்றும் அபிவிருத்தி என்பவற்றை வழங்குவதன் ஊடாக ஊக்கப்படுத்துதல் மற்றும் சேவை வழங்கல்களின் தரத்தை அபிவிருத்தி செய்ய முடியும். இதற்கென பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் கடந்த வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்ததுடன் அதனூடாக சேவை வழங்கலில் தரத்தினை எட்டிக் கொள்வதில் எமது திணைக்களம் வெற்றி கொண்டது. (6.3இன் கீழும் இது தொடர்பாக விளக்கப்பட்டுள்ளது)

- திணைக்களத்தின் ஊடாக சேவை வழங்கலை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக வெளியார் நிறுவனங்கள் பலவற்றுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு செயற்படுவதுடன் சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுதல், இலக்கத் தகடுகளை அச்சிடுதல் போன்றன இவற்றுள் பிரதானமாகும். அதனூடாக அடைந்து கொள்ளப்பட்டுள்ள முன்னேற்றமானது மிகச்சிறந்த மட்டத்தில் காணப்படுகின்றது.

# 05 ஆம் அத்தியாயம்

## நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை (ளுனுபு) அடைந்து கொள்ளலின் செயலாற்றுகை

### 5.1 அடையாளங் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| இலக்கு / நோக்கம் | இலக்கினை அடைந்து கொள்வதற்காக திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் | வெற்றிக்கான அளவுகோல்கள் | இதுவரை அடைந்து கொள்ளப்பட்ட வெற்றியின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0% - 49% | 50% - 74% | 75% - 100% |
| **சிறந்த ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தி அனைவரதும் நலனோம்பல்களை அபிவிருத்தி செய்தல்**<br><br>2030 ஆம் ஆண்டளவில் பெருந்தெருக்களில் இடம்பெறும் விபத்துக்களின் ஊடாக ஏற்படும் ஆபத்துக்கள் மற்றும் இறப்புக்களின் அளவைக் குறைத்தல். | வீதிகளில் ஓடுகின்ற வாகனங்களது தரங்களை பேணிச் செல்லும் பொருட்டு<br>• வாகனங்களை இறக்குமதி செய்யும் போது தரமான வாகனங்களை மட்டும் பதிவு செய்தல்.<br><br>வீதிகளில் ஓட்டும் போது திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ளல்<br>வாகனங்களை ஓட்டுவதற்கு சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்<br><br>எண்ணக்கரு ரீதியான அறிவினைப் பரிசோதித்து செயன்முறைப் பரீட்சைகளை நடாத்தி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்<br><br>சாரதி அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்கும் போது உடல் தகைமையை மீண்டும் பரிசோதித்துப் பார்த்தல்<br>• சாரதி அனுமுதிப்பத்திரத்தை வழங்கும் போது வயது எல்லைகளை கவனத்திற் கொள்ளுதல். | வருடாந்தம் விபத்துக்களினால் ஏற்படும் ஆபத்துக்கள் மற்றும் இறப்புக்களது சதவீத வேறுபாடுகள் | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வலகு குறைந்தோர் மற்றும் விசேட தேவையுடையோருக்கு விசேட முறைகளை பின்பற்றுதல்.<br>பொதுமக்கள் போக்குவரத்திற்கு விசேட குறிப்புகளுடன் கூடிய சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்<br>• சாரதிகளுக்கு பாதகமான புள்ளிகளை வழங்கும் முறையை செயற்படுத்துதல் | | | | |
| 2030 ஆம் ஆண்டளவில் இரசாயனங்கள் மூலமாக காற்று, நீர் மற்றும் மண் மாசுபடுவதன் காரணமாக ஏற்படுகின்ற இறப்புக்கள் மற்றும் நோய் நிலைமைகளை குறைத்தல்<br>2030 ஆம் ஆண்டளவில் மாசுகளை குறைத்து நீரின் தரத்தை அதிகரிப்பதற்கு நச்சு இரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் பிற பொருட்களை அகற்றுவதைக் குறைத்தல்<br>2030 ஆம் ஆண்டளவில் காற்று மாசடைவதைத் தடுத்து பாதகமான சுற்றுச்சூழல் நிலைமைகளை குறைத்தல்<br>2020ஆம் ஆண்டளவில் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ள சர்வதேச வேலைத்திட்டத்திற்கமைய சூழலுக்குகந்த கழிவுப் பொருட்களை மட்டும் அகற்றுதல் | • வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை மாசுகளைக் குறைப்பதற்கு வாகனங்களைப் பரிசோதித்தல்<br>• கராஜ்களை பதிவு செய்யும் போது சரியான விதத்தில் கழிவு நீரை அகற்றும் முறையை பரிசோதித்தல்.<br>ஒலி மாசுகளைக் குறைப்பதற்கு ஒலிபெருக்கிகளது தரங்களைப் பரிசோதித்தல். | வாகனங்களிலிருந்து வெளியேறும் புகை மாசுகள் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை குறைதல்.<br>கராஜ்களைப் பதிவு செய்யும் போது சுத்திகரிக்கப்படாத கழிவு நீரை நீர் நிலைகளில் விடுதல் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகள் குறைதல்.<br>ஒலி மாசுகள் தொடர்பாக கிடைக்கின்ற முறைப்பாடுகள் குறைதல். | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முழுமையான நியாயமாக தரமான கல்வியை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்க வழிசெய்தல்<br><br>ஸ்மார்ட் தொழில்கள் மற்றும் முயற்சியாண்மைக்கு தொழிநுட்ப மற்றும் தொழில் தகைமை திறன்களைப் பெற்றுள்ள இளையோர் மற்றும் வளர்ந்தோரின் எண்ணிக்கையை அதிகரித்தல்.<br><br>2020ஆம் ஆண்டளவில் கல்வி பெறாத தொழிலற்ற இளைஞர்களது எண்ணிக்கையை குறைத்தல். | ஒவ்வொரு வாகன வகுப்புகளை அறிமுகப்படுத்தி அதற்காக பயிற்சிகளை வழங்கக்கூடிய நிறுவனங்களை தரப்படுத்துதல் மற்றும் வழிப்படுத்துதல்.<br><br>எழுத்துமூல மற்றும் செயன்முறைப் பரீட்சை ஊடாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாட்டை பேணிச் செல்லுதல் மற்றும் வயதைப் பூர்த்தி செய்த அனைத்து பிரஜைகளுக்கும் சந்தர்ப்பத்தினை வழங்குதல். | சாரதி பாடசாலைகளை வழிப்படுத்தும் போது அறிக்கை செய்யப்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகளது எண்ணிக்கை குறையுதல் | | | |
| நிலைபேறான அபிவிருத்திக்கு வினைத்திறனான பொறுப்புக்களைக் கொண்ட முழுமையான நிறுவனமொன்றைக் கட்டியெழுப்புதல்<br><br>அனைத்து விதமான இலஞ்ச ஊழல்களை பாரியளவில் குறைத்தல்.<br><br>வினைத்திறனான வெளிப்படைத்தன்மை மிக்க நிறுவனமொன்றை அமைத்தல். | • இலஞ்ச ஊழல்களைக் குறைத்தலுக்கு நவீன தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப செயற்பாடுகளில் அதிகம் ஈடுபட்டு சேவைகளை வழங்குதல்.<br><br>• இலஞ்ச ஊழலுக்கு எதிராக செயற்படுவதற்கு நிறுவனத்திற்குள் அறிவுறுத்தல்கள் இடப்பட்டிருத்தல் மற்றும் முறையிடுவதற்கு வசதிகளைச் செய்திருத்தல்.<br><br>• தகவல் உத்தியோகத்தர்கள் ஊடாக பொதுமக்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவதற்கு ஒரு முறையைத் தயாரித்தல். | இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உறுதிப்படுத்தப்படுகின்ற எண்ணிக்கைகளைக் குறைதல். | | | |

## 5.2 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்வதன் வெற்றி மற்றும் சவால்கள்

எமது திணைக்களத்தினால் அடையாளங் காணப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதில் எதிர்கொள்ளும் தடைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தொடர் இலக்கம் | இலக்கம் | இலக்கை அடைந்து கொள்வதற்கு தடையாக உள்ள விடயங்கள் |
|---|---|---|
| 1. | 2030 ஆம் ஆண்டளவில் வீதிகளில் ஏற்படும் விபத்துக்கள் காரணமாக ஏற்படுகின்ற காயங்கள் மற்றும் இறப்புக்களது எண்ணிக்கையை குறைத்தல் | வாகனங்களது தரங்களை கண்காணிப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற திடீர் பரிசோதனைகளது அளவானது மனிதவள பௌதீக வளங்களில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக குறைவடைந்துள்ளது.<br>வீதிக்கட்டமைப்புக்களில் காணப்படும் அபிவிருத்தியடையா நிலைமைகள் வாகனங்களது உரிய தரங்களை பேணிச் செல்வதற்கு தடையாக இருத்தல்.<br>சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயன்முறைப் பரிசோதனைகளது தரங்களை அளவிடுவதற்கு நவீன தொழிநுட்ப முறைகளை போதுமானளவு அறிமுகப்படுத்தியிராமை.<br>சாரதிகளுக்கு தொடர்ச்சியாக பயிற்சி பாடநெறிகள் திட்டமிடப்பட்டிராமை.<br>சாரதிகளுக்கு பாதகமான புள்ளிகளை வழங்கும் திட்டம் பல நிறுவனங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருப்பதால் இன்னமும் அவை நடைமுறைப்படுத்தப்படாமல் காணப்படுதல். |

| | | |
|---|---|---|
| 2. | 2030 ஆம் ஆண்டளவில் இரசாயன, வளி, நீர், மற்றும் மண் என்பன மாசுபடுவதால் ஏற்படும் நோயாளிகள் மற்றும் இறப்புக்களின் எண்ணிக்கை குறைதல். | தவறான முறைகள் ஊடாக புகைப் பரிசோதனைகளை மேற்கொள்ள முனைதல்.<br>கராஜ்களை பதிவு செய்ததன் பின்னர் அவற்றை கண்காணிப்பதற்கு உரிய முறைகள் காணப்படாமை.<br>பொதுமக்கள் இத்துறையில் காணும் பிரச்சினைகளை உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்க முயலாதிருத்தல். |
| 3. | முழுமையான நியாயமாக தரமான கல்வியை உறுதிப்படுத்துதல் மற்றும் அனைவருக்கும் வாழ்நாள் முழுவதும் கற்பதற்கு சந்தர்ப்பம் வழங்குதல். | சாரதி பயிற்சிகளைப் பெறுகின்ற பயிலுனர்களது தரமானதும் போதுமானளவு பயிற்சியின்றி சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெறுவதற்கு முயற்சித்தல். |
| 4. | நிலைபேறான அபிவிருத்திக்கு வினைத்திறனான பொறுப்புவாய்ந்த முழுமையான நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல். | ஊழியர்கள் மற்றும் சேவை பெறுநர்களிடையே காணப்படும் தவறான மனப்பாங்கு காரணமாக இலஞ்சம் மற்றும் ஊழல்களில் ஈடுபட முனைதல். |

# 06 ஆம் அத்தியாயம்

## மனிதவள திரட்டு

## 6.1 ஆளனி முகாமைத்துவம்

| | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றிடம் / மிகை |
|---|---|---|---|
| சிரேஸ்ட | 30 | 29 | |
| மூன்றாம் நிலை | 23 | 6 | |
| இரண்டாம் நிலை | 821 | 713 | |
| ஆரம்ப நிலை | 138 | 124 | |

## 6.2 நிறுவனத்தின் செயற்றிறனுக்கு மனதவள மிகை அல்லது குறை எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது?

- ✓ திணைக்களத்திலுள்ள நிறுவனங்களில் தொழிநுட்ப அறிவினைக் கொண்ட உத்தியோகத்தர்களது குறைபாடு காரணமாக அத்தியாவசிய கடமைகளின் போது தடங்கல்கள் ஏற்படுகின்றன. உதாரணமாக உத்தேச மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் இன்மை மற்றும் இயந்திர மற்றும் பொறிமுறைகளை திருத்துவதற்கான ஒரு பயிற்றப்பட்ட ஊழியர்கள் இன்மை.

- ✓ மோட்டார் வாகனப் பரிசோதகர்கள் குறைபாடு காரணமாக எமது திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற தொழிநுட்ப சேவைகளுக்கு தடைகள் ஏற்படுதல்.

- ✓ பெறுகை செயற்பாடுகள் அடிக்கடி இடம்பெறுகின்ற திணைக்களம் என்ற ரீதியில் அதற்கென பிறிதாக ஒரு கணக்காளர் இல்லாமை காரணமாக செயற்பாடுகளில் பின்னடைவுகள் ஏற்படுகின்றன.

## 6.3 மனிதவள அபிவிருத்தி

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பயிற்று விக்கப்பட்ட ஊழியர் களின் எண்ணிக்கை | காலப்பகுதி | மொத்த முதலீடு (ரூ. ,000) | | திட்டத்தின் இயல்பு (உள்நாடு / வெளிநாடு) | வெளியீடு / பெற்றுக் கொண்ட அறிவு |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாடு | வெளி நாடு | | |
| சேவைபெறுநர் திருப்தியை அதிகரிக்கும் நோக்குடனான ர்முறு வுமு முநுநீ லுமுருசு ளுவுயுகுகு ர்யீலு பயிற்சித்திட்டங்கள் | 30 | 2019.01.26 | 20,892.85 | | உள்நாடு | 70% |
| ஆடைழனய யுஉயனநஅல | 10 | 2019.03.18 | | | உள்நாடு | 75% |
| பெறுகை முகாமைத்துவம் | 1 | 05 னயலள | 26,000.00 | | உள்நாடு | 80% |
| அரச உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கூறல் மற்றும் கணக்காய்வு பிரச்சினைகளை குறைத்துக் கொள்ளல் மற்றும் அழுத்த முகாமைத்துவம் | 200 | 2019.10.05 | 379,698.00 | | உள்நாடு | 80% |
| வினைத்திறன் மற்றும் நேர்மறையான மனப்பாங்கு, அழுத்த முகாமைத்துவம் | 200 | 2019.10.19 | 395,935.00 | | உள்நாடு | 75% |
| இலக்கத்தகடு மற்றும் இலக்கத்தகடு ஸ்ரிக்கர் தொடர்பான பெறுகையின் பின்னரான தகைமைகளைப் பரிசோதித்தல் - ஜேர்மன் சுற்றுலா | 3 | 2019.01.16 - 2019.01.23 | 2,830,416.00 | | வெளிநாடு | 85% |
| இலங்கை கணக்காளர் ஐஆம் வகுப்பு உத்தியோகத்தர்களுக்கான இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - மலேசியா | 1 | 2019.07.01 - 2019.07.07 | 49,425.60 | | வெளிநாடு | 90% |
| ஆசியாவின் 12 ஆவது அரச பிராந்தியங்களுக்கிடையிலான நிலைபேறான போக்குவரத்து சம்மேளனம் - வியட்நாம் | 1 | 2019.10.28 - 2019..12.31 | 81,909.00 | | வெளிநாடு | 80% |
| இலங்கைக்கான அரச முகாமைத்துவம் மற்றும் ஈ - அரசு தொடர்பான செயலமர்வு - சீனா | 2 | 2019.11.09 - 2019.12.01 | 331,200.00 | | வெளிநாடு | 80% |
| இலங்கை போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை திட்டமிடுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பான செயலமர்வு – சீனா | 1 | 2019.12.09 - 2019.12.24 | 116,134.00 | | வெளிநாடு | 80% |

# 07 ஆம் அத்தியாயம்

## இணக்கப்பாட்டு அறிக்கை

| இலக்கம் | உரித்தாக்கப்பட வேண்டிய தேவைப்பாடுகள் | இணக்கப்பாட்டு நிலைமைகள் (இணங்குகிறது / இணங்கவில்லை) | இணங்கவில்லையெனின் அது தொடர்பில் சிறு விளக்கம் | இணங்காமையை எதிர்காலத்தில் குறைத்துக் கொள்வதற்கு பிரேரிக்கப்படுகின்ற சரியான தீர்மானங்கள் / செயற்பாடுகள் |
|---|---|---|---|---|
| 01.0 | **கீழே காட்டப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா** | | | |
| 01.1 | வருடாந்த நிதிக் கூற்று | இணங்குகிறது | | |
| 01.2 | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு | இணங்குகிறது | | |
| 01.3 | வர்த்தகம் மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வர்த்தக முற்பணக் கணக்கு) | | | |
| 01.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | | | |
| 01.5 | விசேட முற்பணக் கணக்கு | | | |
| 01.6 | பிற | | | |
| 02.0 | **புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பேணிச் செல்லுதல் (நி.பி. 445)** | | | |
| 02.1 | அ.நி.சு. 267/2018 இன் அடிப்படையில் நிலையான சொத்து பதிவேடுகளை இற்றைவரைப்படுத்தி பேணிச் செல்லுதல் | இணங்கவில்லை | இதுவரை அத்தகைய சரியானதொரு பதிவேடு திணைக்களத்திடம் காணப்படவில்லை | அனைத்து நிலையான சொத்துக்கள் தொடர்பிலும் தகவல்களைப் பெற்று சொத்து பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| 02.2 | தனியாள் சம்பள பதிவேடு / அட்டை என்பனவற்றை இற்றைவரைப்படுத்தி பேணிச் செல்லுதல். | இணங்குகிறது | | |
| 02.3 | கணக்காய்வு ஐயவினா பதிவேட்டை இற்றைவரைப்படுத்தி பேணிச் செல்லுதல் | இணங்குகிறது | | |
| 02.4 | உள்ளக கணக்காய்வு பதிவேட்டை | இணங்குகிறது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | இற்றைவரைப்படுத்தி பேணிச் செல்லுதல் | | | |
| 02.5 | அனைத்து மாதாந்த கணக்கு பொழிப்புக்களை (ஊஜபுயுளு) தயாரித்து உரிய திகதியில் திறைசேரிக்கு அனுப்புதல் | இணங்குகிறது | | |
| 02.6 | காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை இற்றைவரைப்படுத்தி பேணிச் செல்லுதல் | இணங்குகிறது | | |
| 02.7 | பொருட்பதிவேட்டை இற்றைவரைப்படுத்தி பேணிச் செல்லுதல் | இணங்குகிறது | | |
| 02.8 | இருப்பு பதிவேட்டை இற்றைவரைப்படுத்தி பேணிச் செல்லுதல் | இணங்குகிறது | | |
| 02.9 | நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் பதிவேட்டை இற்றைவரைப்படுத்தி பேணிச் செல்லுதல் | இணங்குகிறது | | |
| 02.10 | பொறுப்புக்கள் பதிவேட்டை இற்றைவரைப்படுத்தி பேணிச் செல்லுதல் | இணங்குகிறது | | |
| 02.11 | அடியிதழ் பதிவேட்டை (புயுГ20) இற்றைவரைப்படுத்தி பேணிச் செல்லுதல் | இணங்குகிறது | | |
| 03.0 | **நிதி கட்டுப்பாட்டிற்கு செயற்பாடுகளை கையளித்தல் (நி.பி.135)** | | | |
| 03.1 | நிதி அதிகாரங்களை கையளித்தல் | இணங்குகிறது | | |
| 03.2 | நிதி அதிகாரங்களை கையளித்தல் தொடர்பில் நிறுவனத்திற்குள் அறிவுறுத்தப்பட்டிருத்தல். | இணங்குகிறது | | |
| 03.3 | அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் ஊடாக அனுமதிக்கப்படும் விதத்தில் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டிருத்தல். | இணங்குகிறது | | |
| 03.4 | 2014.05.11 ஆந் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சம்பளங்கள் மென்பொருள் பக்கேஜை பயன்படுத்தும் போது கணக்காளரது கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுதல். | இணங்குகிறது | | |
| 04.0 | **வருடாந்த திட்டங்களைத் தயாரித்தல்.** | | | |
| 04.1 | வருடாந்த செயற்றிட்டங்களைத் தயாரித்தல் | இணங்குகிறது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 04.2 | வருடாந்த பெறுகைத் திட்டங்களைத் தயாரித்தல் . | இணங்குகிறது | | |
| 04.3 | வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டங்களைத் தயாரித்தல். | | | |
| 04.4 | வருடாந்த உத்தேச மதிப்பீடுகளைத் தயாரித்து தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்திற்கு (டீனு) உரிய திகதியில் அனுப்புதல் | இணங்குகிறது | | |
| 04.5 | வருடாந்த நிதி பாய்ச்சல் கூற்றுக்களை உரிய திகதியில் திறைசேரி தொழிற்பாட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல். | | | |
| 05.0 | **கணக்காய்வு ஐயவினா** | | | |
| 05.1 | கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாவுக்கும் பதில் அனுப்பியிருத்தல். | இணங்கவில்லை | பதிவேடுகளைப் பரிசோதித்தலுக்கு நீண்ட காலம் எடுத்தல். | ஈ - மோட்டரிங் கருத்திட்டத்தை செயற்படுத்துவதன் ஊடாக இனிவரும் காலங்களில் இத்தகைய பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். |
| 06.0 | **உள்ளக கணக்காய்வு** | | | |
| 06.1 | நி.பி.. 134(2) னுஆயு/1-2019 இன் அடிப்படையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்தாலோசித்து உள்ளக கணக்காய்வு திட்டங்களைத் தயாரித்தல். | இணங்குகிறது | | |
| 06.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாத காலப்பகுதியில் பதில் வழங்கியிருத்தல். | இணங்கவில்லை | உத்தியோகத்தர்கள் அது தொடர்பில் ஆர்வம் காட்டாமை | உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டிருத் தல். |
| 06.3 | 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கணக்காய்வு சட்டத்தின் 40(4) உப பந்தியின் பிரகாரம் அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளது பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருத்தல். | இணங்குகிறது | | |
| 06.4 | நி.பி.134(3) இன் அடிப்படையில் அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் | இணங்குகிறது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | | | |
| 07.0 | **கணக்காய்வு முகாமைத்துவ குழு** | | | |
| 07.1 | னுஆயு சுற்றறிக்கை 1-2019 இன் அடிப்படையில் ஆகக்குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் உரிய வருடத்தில் நடாத்தப்பட்டிருத்தல். | இணங்குகிறது | | |
| 08.0 | **சொத்து முகாமைத்துவம்** | | | |
| 08.1 | இலக்கம் 01/2017 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07ஆம் பந்திக்கமைய சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பான தகவல்களை கொம்ப்ரோலர் ஜனரால் அலுவலகத்திற்கு சமர்ப்பித்திருத்தல். | இணங்கவில்லை | உத்தியோகத்தர்கள் அது தொடர்பில் ஆர்வம் காட்டாமை | உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டிருத்தல். |
| 08.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13ஆம் பந்திக்கமைய அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக பொருத்தமான ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரை நியமித்து அவ்வுத்தியோகத்தர் தொடர்பான தகவலை கொம்ப்ரோலர் ஜனரால் அலுவலகத்திற்கு சமர்ப்பித்திருத்தல். | இணங்கவில்லை | அதற்காக இதுவரை ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்படவில்லை | ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 08.3 | அ.நி.சு.இலக்கம் 05/2016 இன் அடிப்படையில் பொருட் சுற்றாய்வை நடாத்தி உரிய அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமையதிக்கு சமர்ப்பித்தல். | இணங்குகிறது | | |
| 08.4 | வருடாந்த பொருட் சுற்றாய்வில் கண்டுணரப்பட்ட மிகை மற்றும் குறை மற்றும் பிற விதப்புரைகளை சுற்றறிக்கையில் குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறைவேற்றியிருத்தல். | இணங்கவில்லை | பல்வேறு காரணங்களால் உரிய காலப்பகுதியுள் நடவடிக்கை எடுக்கப்படாமை | உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் |
| 08.5 | ஒதுக்கப்பட்ட பொருட்களை அகற்றியிருத்தல். | இணங்கவில்லை | உரிய விதத்தில் மேற்பார்வை செய்யப்படாமை | உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | நி.பி.772இன் அடிப்படையில். | | | |
| 09.0 | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 09.1 | குழும வாகனங்களுக்கு தின ஓட்டக்குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல். | இணங்குகிறது | | |
| 09.2 | அகற்றப்பட வேண்டிய வாகனங்களை 06 மாதத்திற்குள் அகற்றியிருத்தல். | இணங்குகிறது | | |
| 09.3 | வாகனங்களது லொக் புத்தகங்களை இற்றைவரைப்படுத்தி பேணுதல் | இணங்குகிறது | | |
| 09.4 | அனைத்து வாகன விபத்துக்கள் தொடர்பாகவும் நி.பி. 103,104,109,110 அடிப்படையில் நடவடிக்கை எடுத்திருத்தல். | இணங்குகிறது | | |
| 09.5 | 2016.12.29 ஆந் திகதிய இலக்கம் 2016/30 என்ற அ.நி.சு.3.1 பந்திக்கமைய எரிபொருள் பாவனையை மீள பரிசோதித்தல். | இணங்குகிறது | | |
| 09.6 | குத்தகை காலப்பகுதியின் பின்னர் குத்தகை வாகனங்களது லொக் புத்தகங்களது முழுமையான உரிமையை மாற்றிக் கொள்ளுதல். | இணங்குகிறது | | |
| 10.0 | **வங்கிக் கணக்கு முகாமைத்துவம்** | இணங்குகிறது | | |
| 10.1 | உரிய திகதியில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டு சான்றுப்படுத்தப்பட்டு அவை கணக்காய்விற்கு அனுப்பப்பட்டுள்ளன. | இணங்குகிறது | | |
| 10.2 | மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முன்னரான வருடங்களில் இருந்து முன்கொணரப்படுகின்ற வலுவிலற்ற வங்கிக் கணக்குகளை தீர்த்திருத்தல். | இணங்குகிறது | | |
| 10.3 | வங்கிக் கணக்கிணக்க கூற்றுகளில் அறிந்த கொள்ளப்பட்ட மற்றும் இணக்கம் செய்ய வேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் | இணங்கவில்லை | | வங்கிக் கூற்றுக்களை முறையாக அனுப்புமாறு வங்கிகளுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நி.பி.அடிப்படையில் நடவடிக்கை எடுத்து அம்மீதிகளை ஒரு மாத காலப்பகுதியுள் தீர்த்தல். | | | |
| 11.0 | **ஒதுக்கீடுகளது பயன்பாடு** | | | |
| 11.1 | ஒதுக்கப்பட்ட ஒதுக்குகளின் எல்லைகளை விஞ்சாதவாறு செலவுகளை மேற்கொள்ளுதல். | இணங்குகிறது | | |
| 11.2 | நி.பி. 94(1) இன் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட ஒதுக்குகளை பயன்படுத்தியதன் பின்னர் வருட இறுதியில் மீதி ஒதுக்குகளை விஞ்சாதவாறு பொறுப்புக்களை ஏற்றல். | இணங்கவில்லை | போதுமானளவு கவனம் செலுத்தப்படாமை | இனிவரும் காலங்களில் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 12.0 | **அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு ஏற்ப இருத்தல் | இணங்குகிறது | | |
| 12.2 | நிலுவை மீதிகள் தொடர்பில் கால பகுப்பாய்வு செய்திருத்தல். | இணங்கவில்லை | போதுமானளவு கவனம் செலுத்தாமை | உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் |
| 12.3 | ஒரு வருடத்திற்கு மேலாகக் காணப்படுகின்ற நிலுவை கடன்களை தீர்த்திருத்தல் | இணங்கவில்லை | கடன் மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் கடினமானது | திறைசேரியின் அறிவுத்தல்களை பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| 13.0 | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலங்கடந்த வைப்புத் தொடர்பில் நி.பி.571இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருத்தல் | இணங்குகிறது | | |
| 13.2 | பொது வைப்புக் கணக்கிற்கான கட்டுப்பாட்டுக் கணக்கை இற்றைவரைப்படுத்தி பேணிச் செல்லுதல். | இணங்குகிறது | | |
| 14.0 | **கட்டுநிதி கணக்கு** | இணங்குகிறது | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டு இறுதியில் காசுப் புத்தகத்தின் மீதியை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு மாற்றியிருத்தல் | இணங்குகிறது | | |
| 14.2 | நி.பி.371இன் அடிப்படையில் வழங்கப்பட்ட உரிய வேலைக்கான சிறு கட்டுநிதியை அச்செயற்பாடு | இணங்குகிறது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்த்தல். | | | |
| 14.3 | நி.பி.371இன் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட எல்லையை விஞ்சாதவாறு சிறுகட்டுநிதி வழங்கப்பட்டிருத்தல். | இணங்குகிறது | | |
| 14.4 | கட்டுநிதி கணக்கின் மீதி, திறைசேரி புத்தகங்களுடன் மாதாந்தம் இணக்கம் செய்தல் | இணங்குகிறது | | |
| 15.0 | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | உரிய விதிமுறைகளுக்கமைய சேகரிக்கப்பட்ட வருமானத்தில் மீளக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல். | இணங்குகிறது | | |
| 15.2 | சேசகரிக்கப்பட்ட வருமானங்களை வைப்புக் கணக்கிற்கு மாற்றாது, நேரடியாக வருமானத்திற்கு மாற்றியிருத்தல். | இணங்குகிறது | | |
| 15.3 | நி.பி.176இன் அடிப்படையில் நிலுவை வருமான அறிக்கைகளை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருத்தல். | இணங்குகிறது | | |
| 16.0 | **மனிதவள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அனுமதிக்கப்பட்ட ஆளனி எல்லைக்குள் ஆளனி எண்ணிக்கையை பேணிச் செல்லுதல் | இணங்குகிறது | | |
| 16.2 | ஆளினியினரின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் கடமைப் பட்டியல் வழங்கப்பட்டிருத்தல். | இணங்குகிறது | | |
| 16.3 | 20.09.2017 ஆந் திகதிய ஆளுனு 04/2017 சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அறிக்கைகளையும் முகாமைத்துவ திணைக்களத்திற்கு அனுப்பியிருத்தல். | இணங்குகிறது | | |
| 17.0 | **பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல்** | | | |
| 17.1 | தகவ்ல அறிந்து கொள்ளும் சட்டம் மற்றும் விதிமுறைகளின் பிரகாரம் தகவல் அலுவலர் ஒருவரை நியமித்து தகவல்களை வழங்கும் ஒரு | இணங்குகிறது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பதிவேட்டை இற்றைவரைப்படுத்தி பேணிச் செல்லுதல் | | | |
| 17.2 | நிறுவனம் தொடர்பான தகவல்கள் இணயத்தளம் ஊடாக அல்லது வேறு மாற்று முறைகள் ஊடாக வழங்கப்பட்டுள்ளதுடன் பொதுமக்களது முறைப்பாடுகள் மற்றும் பாராட்டுக்களைப் பெறுவதற்கு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | இணங்குகிறது | | |
| 17.3 | தகவல் அறியும் சட்டத்தின் 08 ஆம் மற்றும் 10ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு வருடத்திற்கு இரண்டு தடைவை அல்லது ஒரு தடைவை சமர்ப்பித்திருத்தல். | இணங்குகிறது | | |
| 18.0 | **சேவை பெறுநர் பட்டயம்** | | | |
| 18.1 | இலக்கம் 05/2008 மற்றும் 05/2018(1) என்ற அ.நி.சு. அமைய சேவை பெறுநர் பட்டயத்தை தயாரித்திருத்தல் | இணங்குகிறது | | |
| 18.2 | இந்த சுற்றறிக்கையின் 2.3 பந்தியின் பிரகாரம் சேவை பெறுநர் பட்டயத்தை தயாரித்து நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கு நிறுவனத்தினால் ஒரு முறையொன்று தயாரிக்கப்பட்டிருத்தல். | இணங்குகிறது | | |
| 19.0 | **மனிதவள திட்டங்களைத் தயாரித்திருத்தல்.** | | | |
| 19.1 | 2018.01.24 ஆந் திகதிய அ.நி.சு. 02/2018 இணைப்பு 02 படிவத்தை அடிப்படையாகக் கொண்டு மனிதவள திட்டத்தை தயாரித்தல். | | | |
| 19.2 | ஆளனியினரின் அனைத்து அங்கத்தவர்களுக்கும் வருடாந்தம் 12 மணித்தியாலத்திற்குக் குறையாத பயிற்சி வழங்கப்பட்டிருத்தல். | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01இன் அடிப்படையில் மொத்த ஆளனியினருக்கு செயற்றிறன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருத்தல். | | | |
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 பந்திக்கமைய மனித வள அபிவிருத்தி திட்டத்தை தயாரித்தல் தொடர்பில் சிரேஸ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருத்தல். | | | |
| 20.0 | **கணக்காய்வு பந்திகளுக்கு பதிலிறுத்தல்** | | | |
| 20.1 | கடந்த வருடங்களில் கணக்காய்வு தலைமை அதிபதியினால் காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்திருத்தல். | இணங்கவில்லை | சிற்சில முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தாலும் இன்னமும் குறைபாடுகள் காணப்படுகின்றன. | எதிர்காலத்தில் அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |

கணக்கீட்டு உத்தியோகத்தர்
மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் 2019.12.31ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்று தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பந்தியின் படி கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

……………………………………………………………………………………………………………

**1. நிதிக் கூற்றுக்கள்**

--------------------

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-------------------------------------------------

போக்குவரத்துத் திணைக்களத்தின் 2019 டிசெம்பர் 31ஆம் திகதியின் நிதி நிலைமை தொடர்பான கூற்று, அன்றைய திகதியில் முடிவடைந்த வருடத்திற்குரியதான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சற் கூற்றுகள் உள்ளடங்கிய 2019 டிசெம்பர் 31ஆம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்று 2019 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைந்து வாசிக்கக்கூடிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசினுடைய அரசியல் யாப்பின் 154(1 ) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க எனது கட்டளையின்படி கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பந்தியின் படி போக்குவரத்து திணைக்களத்திடம் முன்வைக்கப்படுகின்ற இந்த நிதிக் கூற்று தொடர்பான எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை சனநாயக சோசலிச குடியரசினுடைய அரசியல் யாப்பின் 154(6) ஆவது உறுப்புரையுடன் இணைந்து வாசிக்க வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10வது பந்தியின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படவேண்டிய கணக்காய்வு தலைமையதிபதியின் அறிக்கை எதிர்வரும் காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிற்குரிய தாக்கத்தினைத் தவிர, 2019 டிசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட அந்த நிதிக் கூற்றுக்களினால் 2019 டிசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறான போக்குவரத்துத் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் ஆகியன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு ஏற்ப உண்மையினையும், நியாயத்தன்மையினையும் பிரதிபலிக்கின்றது என்பது நான் கொண்டுள்ள அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம் மீதான கருத்துரைகள்**

-----------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு (இ.க.நி.) ஏற்ப நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பானது, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கருத்துக்களுக்குரிய அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க உண்மையினையும் நியாயத்தினையும் பிரதிபலிக்கின்றவாறு 2019 டிசெம்பர் 03ஆம் திகதிய 27.∴2019 ஆம் இலக்க அரச சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு அமைய இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதொரு உள்ளக நிர்வாகத்தை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவிற்கமைய திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலத்திற்குரித்தான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடியவாறு அதனுடைய வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக நிர்வாக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச்செல்லப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்த வேண்டியதுடன், அந்தக் கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு அதற்கேற்ப கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக பயனுள்ளவாறு நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

-------------------------------------------------------------------------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களுக்கு அப்பாற்பட்டதொன்றதென நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும்.

நியாயமான உறுதிப்படுத்தல்கள் உயர் மட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டாலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இல்லையென்பதனை உறுதிப்படுத்துவதாக இருக்கமாட்டாது. மோசடி மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படக்கூடுமெனினும், இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயனாளர்களினால் பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்ளும்போது இவை தொடர்பாக போதியளவு கவனத்தைச் செலுத்த முடியும்.

என்னால் துறைசார் ஆளுமையுடனும் துறைசார் ஐயத்துடனும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் ஆபத்தினை இணங்காணும் போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்த்துக்கொள்வதற்கு, போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் இடம்பெறும் தாக்கங்களினை விட மோசடிகளினால் எழுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலியான ஆவணங்களைத் தயாரித்தல், நானாவித விட்டுவிடுதல்கள், அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவறவிடுதல் ஆகியன மோசடிகள் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைகின்றன.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பான அடிப்படைக் கருத்துக்களை தெரிவிக்க அபிப்பிராயப்படவில்லை.

- வெளிப்படுத்துதல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமானதும் நியாயமானதுமான முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும்போது, நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமானதாகவும் நியாயமானதாகவும் உள்ளடங்கியுள்ளதாக.

எனது கணக்காய்வில் இணங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கிய குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒத்திருந்ததெனவும்,

(ஆ) இந்த அறிக்கையின் 2.1 (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் தொடர்பாக முன்னைய வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் மீளாய்வாண்டிற்காக முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை.

1.6 **நிதிக்கூற்றுகள் மீதான கருத்துரை**

---

**1.6.1 நிதிச் செயலாற்றுகைக்கூற்று**

---

**1.6.1.1 வருமான பெறுவனவுகள்**

---

சொகுசு வாகன வரி தொடர்பாக 1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆண்டு வரையான வருமான நிலுவைகளை கணக்கிடுதல் 2016 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், அந்த வருமான நிலுவைகள் தொடர்பான எந்தவித அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அந்தக் காலப்பகுதிகளுக்குரிய வருமான நிலுவைகள் எவ்வளவு என்பதனை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. எவ்வாறிருப்பினும், 2009 ஆம் ஆண்டிற்கு முன்னரான 13 வருடங்களிற்காக அப்போது அறவிடப்பட்டிருந்த வருமான நிலுவைகள் ரூ.34,898,108 ஆகும்.

**1.6.2 நிதி நிலைமைக்கூற்று**

---

1.6.2.1 **நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்று**

---

10 மூலதன செலவு விடயங்களிற்காக ரூ.1,601,472,133 2019 ஆம் ஆண்டில் செலவிடப்பட்டிருந்தாலும், நிதியல்லாச் சொத்துக்களின் கூற்றிலிருந்து நடப்பு ஆண்டில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களாக அந்தச் செலவுகள் எவையும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

1.6.3 **காசுப்பாய்ச்சற் கூற்று**

-------------------------------------

(அ) காசுப் பாய்ச்சற்கூற்றின்படி 07 கணக்கீட்டு விடயங்களில் காணப்பட்ட மீதி, அவற்றிற்குரிய உப அட்டவணைகளுடன் ஒப்பிடும் போது ரூ.2,172,994 க்குரிய வித்தியாசம் காணப்பட்டமை.

(ஆ) வருடத்தினுள் பணமாக கிடைத்த ரூ.1,859,524,152 கான சொகுசு வாகன வரிகளிற்குரிய பணம், வருடத்திற்குள் உழைத்துக்கொள்ளப்பட்ட பணமென காசுப் பாய்ச்சற்கூற்று தயாரிக்கும் போது இணங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) காசுப் பாய்ச்சற்கூற்றின்படி திறைசேரிக்கு செலுத்தப்பட்ட கட்டுநிதி மற்றும் 2019 டிசெம்பர் 31ல் காசுப் புத்தக மீதி, திணைக்கள காசுப் புத்தகத்துடன் சமப்படுத்தும் போது ரூ.155,149,141 க்கான தொகை சமனடையாது வித்தியாசம் காணப்பட்டது.

2. **நிதி மீளாய்வு**

--------------------

2.1 **கட்டுநிதி முகாமைத்துவம்**

-------------------------------------

நிதிக்கூற்றின்படி 2019 டிசெம்பர் 31ஆம் திகதியில் கட்டுநிதி கணக்கின் மீதி மற்றும் அன்றைய திகதியின் நிதி நிலைமை கூற்றின்படியான கட்டுநிதி கணக்கின் மீதிகளுக்கிடையில் காணப்பட்ட வேறுபாடுகளை திருத்துவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த சரிசெய்தல் கணக்கு (தொங்கல் கணக்கு) தொடார்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) நிதிச் செயலாற்றுகைக் கூற்றின்படி 2019 டிசெம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட கட்டுநிதி மீதி, தொங்கல் கணக்கு ஆகியன மூலம் 15 பல்வேறுபட்ட பற்று மற்றும் வரவு குறிப்புகள் ஊடாக மீளாய்வு செய்யப்பட்டிருந்தது. எனினும், அந்த தொங்கல் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்த ரூ.286,438,141 விற்குரிய குறுக்குப் பதிவுகளின் பெறுமதிகள் எவ்வாறு கணக்கிடப்பட்டன என்பது பற்றிய முறைகளை காட்டுகின்ற விரிவான உப அட்டவணைகள் எதுவும் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் சேகரிக்கப்பட்ட வருமானங்கள மாத்திரம் தொங்கல் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருக்க வேண்டும் எனினும், காபன் வரிக்குப் பதிலாக போக்குவரத்து திணைக்களத்தினால் 2019 ஆம் வருடத்தினுள் சேகரிக்கப்பட்ட ரூ.62,495,420 க்கான பணமும் தொங்கல் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிட்ட விடயங்களின்படி, தொங்கல் கணக்கின் வலுக்களற்ற தன்மை தொடர்பான நியாயமான உறுதிப்படுத்துதல்கள் கணக்காய்வின்போது பெற்றுக்கொள்ள முடியவில்லை.

2.2 **வருமான முகாமைத்துவம்**

**--------------------------------------**

**பின்வருவன அவதானிக்கப்பட்டன.**

(அ) நி.பி.128 (2) (ஈ) மற்றும் இலக்கம் 01∴2015 மற்றும் 2015 ஜுலை 20 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் 08 வது பந்தியின் பிரகாரம், கால வரையறை முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்கப்படவேண்டிய 2019 ஆம் ஆண்டிற்குரிய வருமான நிலுவை பற்றிய இரண்டு அரையாண்டு அறிக்கைகள் மற்றும் 04 வருமான குறியீட்டு இலக்கங்களின் 02 காலாண்டுகளிற்குரிய வருமான நிலுவை அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 28 நாட்கள் தொடக்கம் 98 நாட்கள் வரையான காலதாமதம் ஏற்பட்டிருந்தது. அதேபோல், மீளாய்வு வருடத்தின் சொகுசு வாகன வரிகளுக்குரிய காலாண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு 23 நாட்கள் தொடக்கம் 44 நாட்கள் வரையில் காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வு வருடத்தின் காபன் வரியாக சேகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி ரூ.1,400 மில்லியனாக காணப்பட்டாலும், அவை நிதிக்கூற்றுக்களில் ரூ.140 மில்லியன் என குறிப்பிடப்பட்டிருந்தன.

(இ) போக்குவரத்து சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்ட வருமானம் ரூ.2,000 மில்லியனாக திருத்தப்பட்டிருந்தாலும், ஏசீஏ1(ஐ) இலக்கத்தையுடைய வேறுபாடுகளை விளக்கும் கூற்றில் அவை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 02 வருமான குறியீடுகளில், திருத்தப்பட்ட வருமான மதிப்பீடு மற்றும் உண்மை வருமானங்களுக்கிடையில் காணப்பட்ட நூற்றுக்கு 13 வீதமான வேறுபாடுகள் ஏசீஏ1(ஐ) இலக்கத்தையுடைய படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(உ) வருமான குறியீடொன்றிற்குரிய 2019 ஆம் ஆண்டின் வருமான மதிப்பீட்டின்படி வருமானம் மற்றும் வருமானங்கள் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானங்களுக்கிடையில் ரூ.7,750 மில்லியன் சமப்படாத வித்தியாசம் காணப்பட்டன.

(ஊ) 5∴2007 ஆம் இலக்கத்தையுடைய 2007 செப்டெம்பர் 05 திகதிய திறைசேரி செயற்பாட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்திடமுள்ள அனைத்து நடைமுறைக் கணக்குகள் தொடர்பான தகவல்களை நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடுதல் வேண்டும் எனினும், இலங்கை வங்கியில் பேணிவருகின்ற நடைமுறைக் கணக்கு தொடர்பில் அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) 01∴2015 ஆம் இலக்கத்தையுடைய 2015 ஜுலை 20ஆம் திகதிய அரச கணக்குக் கொள்கை சுற்றறிக்கையின் 04 (அ) பந்தியின்படி, வருமான நிலுவைகளை தெளிவாக

குறிப்பிடுகின்ற அறிக்கைகள் பேணப்பட்டு வராததுடன் 04 (ஆ) பந்தியின் பிரகாரம், அறவிடப்பட வேண்டிய வருமான நிலுவைகள் மேலும் சேராதவாறு தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதாவது ஒப்பீட்டளவில் 2016 ஆம் வருடத்தினைப் போன்றே 2019 ஆம் வருடத்திலும் வருமான நிலுவைகள் நூற்றுக்கு 208 என்ற அளவில் அதிகரிப்பைக்காட்டியிருந்தது.

(ஏ) வருமானங்களிற்காக பாரிய மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்ற காரணத்தினால் மீளாய்வு வருடத்திலும் முன்னைய 03 வருடங்களிலும் அந்த வருமான குறியீடுகளின் அடிப்படை மதிப்பீட்டின் சதவீதங்கள் குறைவது நூற்றுக்கு 17 தொடக்கம் 90 இடைவெளியினை கொண்டிருந்தது.

2.3 **செலவின முகாமைத்துவம்**

---

**பின்வருவன அவதானிக்கப்பட்டன.**

(அ) சரியான முறையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமையால் 06 செலவு விடயங்களிற்குரிய துாய நிதியில் நூற்றிற்கு 35 தொடக்கம் 100 வீதம் வரை மிகுதியாக காட்டப்பட்டிருந்தது. செலவு விடயமொன்றிற்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ.5,200,000 க்குரிய மொத்த நிதியீட்டமும் மிகுதியாக காணப்பட்டது. 03∴2019 ஆம் இலக்கம் மற்றும் 05∴2019 இலக்கத்தையுடைய தேசிய பாதீட்டு சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப செலவுகளை மட்டுப்படுத்தியதால் மேலுள்ள நிதி எஞ்சியதற்குரிய காரணம் என நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அந்த சுற்றறிக்கையில் மூலதன செலவுகளை மாத்திரமே மட்டுப்படுத்தவேண்டும் என ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தது. எனினும், மேலுள்ள மீதிகள் அனைத்தும் மீண்டெழும் செலவுகளுக்குரிய நிதியீட்டமாகும்.

(ஆ) ஒரு செலவு விடயத்திலிருந்து ரூ.214,800,000 அதாவது, மதிப்பிடப்பட்ட பெறுமதியில் நூற்றுக்கு 98 வீதமானவை நி.பி.66 ன் கீழ் வேறு விடயங்களிற்காக மாற்றப்பட்டிருந்தன. மேலும், 09 செலவு விடயங்களிற்குரிய மதிப்பிடப்பட்ட பெறுமதியில் நூற்றுக்கு 12 தொடக்கம் 73 வீதம் வரையானவை நி.பி.66 ன் கீழ் வேறு செலவு விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்தது.

(இ) 5∴2019 ஆம் இலக்கம் மற்றும் 2019 செப்டெம்பர் 24 திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின்படி, மூலதன செலவுகளிலிருந்து நூற்றுக்கு 25 வீதமானவை சேமிக்கப்பட வேண்டியிருப்பினும், பாரிய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதன் காரணமாக அந்த நூற்றுக்கு 25 வீத மிகுதியினை குறைத்ததன் பின்னரும், 07 செலவு விடயங்களில் காணப்பட்ட எஞ்சிய நிதி நூற்றுக்கு 37 வீதம் தொடக்கம் 100 வீதம் வரையான இடைவெளியைக் கொண்டிருந்தது. மேலும் 02 செலவு விடயங்களின் நிதி நூற்றுக்கு 100 வீதம் எஞ்சியதாக காணப்பட்டது.

## 2.4 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

நி.பி. 94(2) ற்கு ஏற்ப மீண்டெழும் செலவினங்களுக்காக மாத்திரம் பொறுப்புகளை ஏற்கவேண்டும் என்பதுடன், அதற்கு முரணாக ரூ.16,260,062 ற்குரிய மூலதன செலவுகளிற்குரிய பொறுப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட்டமை பொறுப்புகள் கூற்றிலிருந்து தெளிவாக காணக்கூடியதாக உள்ளது.

## 2.5 கணக்குப்பொறுப்பு உத்தியோகத்தரினால் மேற்கொள்ள வேண்டிய உறுதியளித்தல்கள்

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 வது பிரிவின் ஏற்பாடுகளிற்கு அமைய கணக்குப்பொறுப்ப உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் உறுதியளித்தல்கள் மேற்கொள்ள வேண்டியிருப்பினும், அதன்படி செயற்பட்டிருக்கவில்லை.

(அ) போக்குவரத்துத் திணைக்களத்தின் நிதி நிர்வாகம் தொடர்பாக பயனுறுதிவாய்ந்த உள்ளக நிர்வாக கட்டமைப்பொன்று தயாரிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென்பதனை கணக்குப்பொறுப்பு உத்தியோகத்தர் உறுதியளித்தல் வேண்டும் என்பதுடன் அந்தக் கட்டமைப்பின் பயனுறுதி தொடர்பில் ஏற்கனவே மேற்கொண்ட மீளாய்வினை மேற்கொண்டு அதற்கேற்ப கட்டமைப்பை பயனுறுதி மிக்கதாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன், அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியினை கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றுகள் கணக்காய்வு தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவில்லை

(ஆ) கணக்காய்வு தலைமை அதிபதியின் தேவைக்கேற்றவாறு குறிப்பிட்ட காலவரையறைக்குள் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில்கள் வழங்கப்படுகின்றன என்பதனை கணக்குப்பொறுப்பு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும் என்றாலும், கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்காத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களுக்கு இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்களுக்குரிய தொடர்புகள் | இணங்காமை |
|---|---|
| (அ) 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 42 வது பிரிவு | வாகனங்களை பதிவு செய்தல் தொடர்பான கோவைகள் மற்றும் கணக்காய்வு தேவைப்பாடுகளுக்காக கேட்கப்பட்டுள்ள தகவல்கள் கணக்காய்வாளரிடம் முன்வைக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| (ஆ) மோட்டார் வாகன சட்டம் (203 வது பிரிவு) | |
| (ை) 6(அ) | தவறான வாகன பதிவுகளை கட்டுப்படுத்தக் கூடியவாறு பதிவு செய்யப்பட்ட அனைத்து வாகனங்களின் விபரங்கள், உரிய படிவத்தின்படியான பதிவேடுகள் எவையும் தாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ைை) 08 வது பிரிவு | குறித்த கட்டணத்தை செலுத்த தவறும் மோட்டார் வாகனங்களை பதிவு செய்யாதிருத்தல் வேண்டும். எனினும் ஊடீபு – 2476 இலக்கத்தையுடைய வாகனத்தினுடைய உரிய கட்டணம் மற்றும் அனுமதி 2019 மார்ச் 07 ஆம் திகதி பெறப்பட்டிருந்தாலும், அதற்கு 06 தினங்களுக்கு முன்னர் அதாவது, 2019 மார்ச் 01 ஆம் திகதி ஒப்படைத்தல் பதிவுசெய்யப்பட்டிருந்தது. |
| (ைைை)18 (8)(அ) | ஆணையாளர் நாயகத்தினால் ரத்துச்செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டு வரவில்லை. இதன் காரணமாக பொது மக்களுக்கு ரத்துச் செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பான தகவல்களை பரிசீலித்துக்கொள்ள முடியாமலுள்ளது. |

(இ)1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க உத்தியோகத்தர்களிடம் வாகன கோவைகளின் தேசிய சுவடிகள் பாதுகாப்புச் சட்டத்தின் உடைமை மற்றும் பொறுப்பு ஆகியன 28வது பிரிவு மற்றும் தாபன கையளிக்கப்பட்டிருக்கவில்லை, தவறான விதிக்கோவையின் ஓஓஏஐஐஐ வது முறையில் வாகனங்களை பதிவு செய்வதற்குஅத்தியாயத்தின் 9(ஐ) உப பிரிவு வழங்கப்பட்டிருந்தவை உப அதிகாரங்கள்

என்றும் எண்ணிலடங்காத அதிக வாகன கோவைகள் வேரஹெல அலுவலக பிரதேசத்திலுள்ள கொள்கலன்களில் அழிவடைந்துகொண்டு வருகின்றதென்பதையும் அழிவடைய முன்னர் அதனுடைய பூரண தகவல்களை பதிவேடுகளில் பதிவதற்குரிய தேவைப்பாடுகள் காணப்படுவது அவதானிக்கப்பட்டன. வாகன கோவை கணக்காய்விற்கு உடனடியாக முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் இந்த கோவைகளுடைய பொறுப்பு உத்தியோகத்தர்களிடம் குறிப்பிட்டு கையளிக்கப்பட்டிருக்கப்படவில்லை.

2.7 முற்பணம் வழங்குதல் மற்றும் செலுத்துதல்

---------------------------------------------------------------------

பின்வருவான அவதானிக்கப்பட்டன.

(அ) இறந்தவர்களுடைய 05 வருடத்திற்கு மேல் காலங்கடந்தவற்றின் கூட்டுத்தொகை ரூ.727,523 க்குரிய கடன் மீதி தீர்க்கப்பட்டிருக்கப்படவில்லை என்பதுடன் இவை தாபன விதிக் கோவையின் ஓஓஐஏ அத்தியாயத்தின் 4வது பிரிவிற்கு முரணானதாகும்.

(ஆ) நி.பி.(4) 485 மற்றும் 89 ஆம் இலக்க 1993 ஒக்டோபர் 22 ஆம் திகதிய அரச வர்த்தக சுற்றறிக்கையின் படி இடமாற்றம் பெற்று சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி மூன்று மாதத்திற்குள் தீர்க்கப்படுதல் வேண்டும். எனினும், இடமாற்றம் பெற்று சென்றாலும் 2019 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை தீர்க்கப்படாதிருந்த ரூ.226,230 ற்குரிய 04 கடன் மீதிகள் தீர்ப்பதற்கு தாமதமான காலம் 05 வருட காலவரையறையினையும் கடந்திருந்தது.

(இ) ஓய்வூதியத்தினை இடைநிறுத்திய 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூ.302,722 ற்குரிய கடன் மீதி 05 வருடங்களைவிட பழமையானதாக காணப்பட்டன.

(ஈ) இறுதி தவணைப் பணத்தினை அறவிட்டு 02 வருடத்தினை விட காலம் கடந்து காணப்பட்ட வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 19 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூ.1,330,463 ற்குரிய கடன் மீதி அவர்களிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்தோ அறவிட்டுக்கொள்வதற்கு 2019 டிசெம்பர் 31 ஆம் திகதி வரைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிடையில் 05 வருடங்களைக் கடந்த 17 கடன் மீதிகளுக்குரிய தொகை ரூ.1,170,753 வாக காணப்பட்டன.

(உ) இறுதி தவணைப் பணத்தினை அறவிட்டு 05 வருடத்தினை விட காலம் கடந்து காணப்பட்ட சேவையை விட்டு விலகிய 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூ.234,042 ற்குரிய கடன் மீதி அவர்களிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்தோ அறவிட்டுக்கொள்வதற்கு 2019 டிசெம்பர் 31 ஆம் திகதி வரைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் 2019 டிசெம்பர் 31 திகதியில் கூட்டுத்தொகை மற்றும் அன்றைய திகதியில் திணைக்களத்தினுடைய புத்தகங்களுடைய மீதிகளுக்கிடையில் ரூ.2,359,113 ற்குரிய வித்தியாசம் காணப்பட்டன. இந்த சமப்படாமைக்கான காரணம் வருடக்கணக்கில் காணப்பட்ட கணக்கீட்டு தவறுகளாக கணக்கு அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தாலும், ரூ.162,597 சமப்படாத வித்தியாசம் 2019 ஆம் வருடத்திலும் காணப்பட்டன.

(எ) திறைசேரியினுடைய கணனி அச்சுக்களின் படி முற்பணக் கணக்கில் 2019 ஆம் வருடத்தில் மேற்கொண்ட பற்று மற்றும் வரவுகளின் பெறுமதி, அந்த வருடத்தின் முற்பணக் கணக்குகளில் மீதி மற்றும் சமப்படுத்தும்போதான கூட்டுத்தொகைகளில் ரூ.142,569 ற்குரிய வித்தியாசம் காணப்பட்டன. எனினும், திணைக்கள புத்தகங்களில் மற்றும் திறைசேரியினுடைய கணனி அச்சுக்களுக்கிடையில் வித்தியாசம் சரியாக இல்லாமையினை குறிப்பிடுகின்ற கூற்றுகளில் அந்த வேறுபாடுகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அரசாங்க உத்தியோகத்தர்களுடைய முற்பணக் கணக்குகளிற்குரிய கட்டுப்பாட்டு கணக்குகளில் வரவு மற்றும் பற்று மீதி மற்றும் வருடாந்த கணக்கிணக்க கூற்றின் மீதிகள் இணக்கப்படுத்தும் போது முறையாக ரூ.88,350 மற்றும் ரூ.59,211 ற்குரிய தொகை ஒன்றிற்கொன்று முரணாக காணப்பட்டன.

2.8 வைப்புகள்

---------------

(அ) ஒப்பந்த வைப்பணவிற்காக வைப்புக் கணக்கில் காணப்பட்ட 2019 டிசெம்பர் 31 திகதியில் 02 வருடங்களைக் கடந்த ரூ.24,179,394 ற்குரிய 12 வைப்புமீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நி.பி. 571(1) இன் பிரகாரம், ஒவ்வொரு அரையாண்டின் இறுதியிலும் காலாவதியான அனைத்து வைப்புகள் தொடர்பான பட்டியல்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 03 வைப்புக் கணக்குகளின் தனிப்பட்ட மீதிகள் பட்டியலின்படி, 2019 டிசெம்பர் 31 ல் மாவட்ட அலுவலகங்களில் காணப்பட்ட ரூ.5,708,778 ற்குரிய வைப்புக் கணக்குகளின் மீளாய்வுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அவை எந்த மாவட்ட அலுவலகங்களின் மீதி என்றும், எப்படிப்பட்ட பழைய மீதி என்பன தொடர்பான சான்றுகள் கணக்காய்வின்போது பெற்றுக்கொள்ளமுடியாதிருந்தன.

(ஈ) 01∴2015 ஆம் இலக்கத்தையுடைய 2015 ஜுலை 20 ஆம் திகதிய அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கையின்படி 04 (இ) பந்தியின் படி வைப்புக் கணக்குகள் மூலம் சேர்க்கப்பட்ட வருமான நிலுவைகள், எதிர்வரும் மாதத்தின் முதலாவது கிழமைக்குள் தீர்க்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும், மேல் மாகாண மற்றும் ஊவா மாகாண சபைகளுக்குரிய 2019 நொவம்பர் மாதம் சேகரிக்கப்பட்ட ரூ.57,640,136 ற்கான வருமானம் உரிய மாகாண சபைகளில் வைப்புச்செய்யாது பொது வைப்புக் கணக்கின் மீதியாக காணப்பட்டன.

2.9 வங்கிக் கணக்குகளை செயற்படுத்தல்

--------------------------------------------------------

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) வங்கி நடைமுறைக் கணக்கிற்காக 2019 டிசெம்பர் 31 திகதியில் தயாரிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கக் கூற்றில் ரூ.1,089,884 ற்குரிய கண்டறியப்படாத கொடுப்பனவுகள் மற்றும் ரூ.778,295 ற்குரிய கண்டறியப்படாத பெறுவனவுகள் காணப்பட்டதுடன் அவை தீர்க்கப்பட்டதன் பின்னர் வங்கிக் கூற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக் கூற்றுக்களின் (ஜை) வது குறிப்பின்படி, 2019 டிசெம்பர் 31 திகதியன்று 06 மாதங்களைக் கடந்த ஆனாலும் கொடுப்பனவிற்காக வங்கிக்கு முன்வைக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூ.1,210,771 ஆகும். காலங்கடந்த அந்த காசோலைகள் எதுவும் நி.பி.396 (ஈ) இன்படி வருமானத்திற்கு வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததுடன் அந்த பெறுமதிகளுக்குள் ஒரு வருடத்தையும் கடந்த ரூ.178,318 ற்குரிய காசோலைகளும் காணப்பட்டன.

3. செயற்பாட்டு மீளாய்வு மற்றும் செயலாற்றுகை

---------------------------------------------------------------------

முன்வைக்கப்படுகின்ற நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானம், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக செயற்பாட்டு மீளாய்வு, பேண்தகு அபிவிருத்தி, நல்லாட்சி மற்றும் மனித வள முகாமைத்துவம் ஆகியவற்றிற்குரிய கணக்காய்வு அவதானிப்புகள் மேற்குறிப்பிட்டுள்ள 1.1 பந்தியில் குறிப்பிட்டுள்ள 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 வது பிரிவின் பிரகாரம் முன்வைக்கப்படுகின்ற அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆர்.ஆர்.எம்.அபேசிங்க பண்டா
பிரதி கணக்காய்வாளர்
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குப் பதிலாக